மார்ச் - 2013

திருவள்ளுவர் ஆண்டு 2044

# செந்தமிழ்

## திங்கள் இதழ்

தொகுதி : 57
பகுதி : 5

விலை ரூ. 10/-



மதுரைத் தமிழ்ச்சங்கம் 14-09-1901 THE MADURAI TAMIL SANGAM

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு

# ஆடிப் பட்டம் தேடி விதை !

பொய்யூற்றுப் பேச்சால்தான் பிழைக்க முடியுமா?
பித்தலாட்டம் செய்வதில்தான் புகழும் கிடைக்குமா?
நெய்யூற்றி நெருப்பைத்தான் அணைப்பது போல
நேர்மையற்ற செயலால்தான் வாழமுடியுமா?

கையூட்டுப் பெற்றேதான் காலம் கழியுமா?
கைதியாகி கடுஞ்சிறையில் கிடக்க லாகுமே !
செய்யுமிந்த இழிச்செயலால் மானம் போகுமே !
மானம்போன பின்னாலே மதிப்பும் போகுமே !

செய்யத்தகா வேலையைத்தான் செய்ய லாகுமோ?
செய்யத்தகும் வேலையைத்தான் ஒதுக்க லாகுமா?
செய்வதெல்லாம் திருத்தமாக செய்ய வில்லையேல்
"செல்லாக்காசாய்" ஆகிவிடும் வாழ்க்கை யல்லவா?

வையகமும் வானகமும் போற்றி வாழ்ந்திட
வழங்காதோர்க்கும் நாம்வழங்கி வாழ்தலே நன்றாம் !
வையத்துள் வாழ்வாங்கு வாழ நினைத்தால்
வருவாய்க்குள் நேர்மையாக வாழ்வதே சிறப்பு !

**"தைபிறந்தால் வழிபிறக்கும் !"** சான்றோர் சொன்னது !
தண்டமாக வாழ்நாளைக் கழிப்போர்க் கல்லவே !
கைமடக்கி உறங்குவோர்க்கும் உகந்த தல்லவே !
கையை நம்பி உழைப்பவர்க்கே **"கரும்புச்"** சொல்லிது !

பெய்கின்ற மழையெல்லாம் பெய்யும் காலத்தில்
பெருவிளைச்சல் தந்திடுமே வயல்கள் முழுக்கவே !
வெய்யில்வரும் முன்னேநாம் பயிர்களை அறுத்து,
வளம்பெறநாம் **"ஆடிப்பட்டம் தேடி விதைப்போம் !"**

பாரதி பணிச்செல்வர்
*கவிஞர். அ. கனகசபாபதி எம்.ஏ.,பி.எட்*
கள்ளக்குறிச்சி - 606 202

# செந்தமிழ்

(தோற்றம் 1903)


தொகுதி : 57 திங்கள் இதழ்

பகுதி : 5 திருவள்ளுவர் ஆண்டு 2044

மார்ச் 2013




வள்ளல் பாண்டித்துரைத்தேவர்
21.03.1867-02.12.1911

| இதழ்க் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | ரூ. 100 | ரூ. 600 |
| ஆயுள் கட்டணம் | ரூ. 1000 | |
| புரவலர் கட்டணம் | ரூ. 5000 | ரூ. 6000 |
| தனி இதழ்க் கட்டணம் | ரூ. 10 | |


**முகவை மன்னர் நா. குமரன் சேதுபதி**

தலைவர்,

மதுரைத் தமிழ்ச்சங்கம்.

---

**ஆசிரியர்**

**இரா. அழகுமலை** எம்.ஏ., எம்.ஃபில்.,

செயலாளர்,

மதுரைத் தமிழ்ச்சங்கம்,

மதுரை.

# பொருளடக்கம்


| தலைப்பு | ஆசிரியர் | பக்கம் |
|---|---|---|
| நகரங்களின் அமைப்பில் துறைமுகப்பட்டினங்களும், வாணிபங்களும் | ச. ஸ்ரீதர் | 4 |
| இலக்கியம் காட்டும் விலங்குகள் | புலவர் சி. பாண்டுரங்கன் | 10 |
| பெண்களின் கூந்தலுக்கு இயற்கையிலேயே மணமுண்டா? | திருமதி. இராசம் மரகதம் | 21 |
| பாரதி கண்ட புதுமைப்பெண் | திருமதி. டாக்டர் செ. ரெஜினா | 24 |
| வேளாளன் விண்ணப்பம் | தமிழாகரர் தெ. முருகசாமி | 30 |
| திருக்குறளின் தோற்றக்களம் அல்லது உரைகாணும் நெறிமுறைகள் | கோவி முனைவர் கா. அரங்கசாமி | 31 |
| தீண்டாமை வேண்டும் | ஆறுவிரல் ஐம்பொறி | 39 |

# இதழ் மணம்

பேரன்புடையீர், வணக்கம் !

மார்ச் மாத இதழ் ஐம்பெரும் அறிஞர்களின் கருத்துக் கட்டுரைகளோடும் இருபெரும் அறிஞர்களின் மரபுக் கவிதைகளோடும் தங்கள் கைகளில் தவழ்கிறது.

முசிறி, தொண்டி, மாந்தை, மங்களூர், நறவு ஆகிய துறைமுகப் பட்டினங்களில் எவ்வெவ்வாறு வாணிகங்கள் நிகழ்ந்தன என்பதைச் சங்க இலக்கியச் சான்றுகளோடு ஸ்ரீதர் அவர்கள் தந்து தான் சிறந்ததொரு ஆய்வறிஞர் என்பதை நிறுவுகிறார்.

அரிமா ( சிங்கம் ), புலி (தேசிய விலங்கு), யானை போன்ற விலங்குகள் இலக்கியங்களில் காட்டப்பெற்றுள்ள பாங்கினை புலவர் சி. பாண்டுரங்கன் அவர்கள் மிகச் சிறப்பாகக் காட்டி அவைகளினால் கானகத்திற்கு ஏற்பட்டிருக்கும் கவினுறு அழகினையும் படம்பிடித்துக் காட்டியிருக்கிறார். இதன் அடுத்தபாகம் ஆவலோடு எதிர்பார்க்கப்படுகிறது.

பெண்கள் கூந்தலுக்கு இயற்கை மணமே என்பதனை நிறுவ சித்தர் பாடல் வரிகளின் துணைகொண்டு பெரும்புலவர் திருமதி இராஜம் மரகதம் அவர்கள் நிறுவியுள்ள பாங்கு பாராட்டிற்குரியது.

பழமையை ஒட்டிய புதுமையைத்தான் பாரதியார் விரும்புகிறார் என்று திருமதி ரெஜினா தன்னுடைய கட்டுரையில் சொல்லியிருக்கும் திறம் வழக்கமானது என்றாலும் பாராட்டலாம்.

செந்தமிழ் வாசகர்கள் ஆவலோடு எதிர்பார்க்கும் கோபி முனைவர் கா. அரங்கசாமி அவர்களின் திருக்குறளின் தோற்றக்களம், "திருக்குறளைப் போற்றாத உலகத் தமிழர் எவரும் இலர்" என்ற அழுத்தமான கருத்தோடு தொடர்கிறது.

முனைவர் தெ. முருகசாமி, அறிஞர் ஐம்பொறி ஆகியோரின் மரபுக் கவிதைகள் செந்தமிழின் அழகுக்குக் அழகூட்டுகிறது.

புலவர் ஞானசேகரன், பாவலர் அறிவரசன், முனைவர் தெ. முருகசாமி ஆகியோரின் வாசகர் வாசகங்களோடு இம்மாத இதழை வெளியிடுவதில் பெருமை அடைகிறோம்.

**முனைவர் க. சின்னப்பா**

**இனி நீங்களும் இதழும்....**

# நகரங்களின் அமைப்பில் துறைமுகப்பட்டினங்களும், வாணியங்களும்

## (சென்ற இதழ் தொடர்ச்சி)

ச. ஸ்ரீதர்
அண்ணாமலை நகர்

## முசிறி

சேரர்களின் துறைமுகங்களில் முசிறித் துறைமுகப்பட்டினமும் புகழ் வாய்ந்தது. மேற்கு தொடர்ச்சி மலையிலிருந்து உண்டான பேரியாறு மேற்குக் கடலில் விழுந்த இடத்தில் இத்துறைமுகம் அமைந்துள்ளது.

உலகப் புகழ் பெற்றிருந்த முசிறித் துறைமுகப்புட்டினத்தை யவனர்கள் முசிறியை முசிறிஸ் என்றும் வால்மீகி இராமாயணத்தில் முசிறியை முரசியதனம் என்று கூறுகின்றது. எகிப்து, கிரேக்கம் முதலிய வேற்று நாட்டினர் இங்கிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட பொருள்களில் மிகப் புகழ்பெற்ற மிளகை(கறி)பொன்தந்து வாங்கிச் சென்றனர் என்பது சங்க இலக்கியச் சான்று.

........................................... "சேரலர்
சுள்ளி அம் பேரியாற்று வெண்நுரை கலங்க
யவனர் தந்த வினைமாண் நன்கலம்
பொன்னோடு வந்து கறியொடு பெயரும்
வளம்கெழு முசிறி ஆர்ப்பு எழு வளைஇ" (அகம். 149)

என்ற அகநானூற்றுப் பாடல் வரிகள் சேரநாட்டு வணிக வரலாற்றுச் சிறப்பை எடுத்து இயம்புகிறது.

முசிறிக் கடலில் முத்துச் சிப்பிகளும் உண்டாயின. முசிறியில் உண்டான முத்துக்களைக் கௌடல்யரின் அர்த்த சாத்திரம் கௌர்ணெயம் என்று கூறுகின்றது. முசிறிக் கடலில் உண்டான முத்துக்கள் முசிறிப்பட்டினத்தைச் சேர்ந்த 'பந்தர்' என்னும் இடத்தில் விற்கப்பட்டன. மேலும் மற்றொரு பகுதியான 'கொடுமணம்' என்னும் இடத்தில் பொான் நகைகளும் விற்கப்பட்டன என்ற செய்தியை பதிற்றுப்பத்தின் மூலமாக நாம் அறியலாம்.

இதனை,

> **இன்னிசைப் புணரி இரங்கும் பௌவத்து**
> **நன்கல வெறுக்கை துஞ்சும் பந்தர்க்**
> **கமழுந தாழைக் கானலம் பெருந்துறை** (6 ஆம்பத்து, 5:3-8)

பந்ததிரிலும் கொடுமணத்திலும் முத்துக்களும் நன்கலன்களும் விற்கப்பட்டன என்பதை,

> **கொடுமணம் பட்ட வினை அருங்கலம்**
> **பந்தர்ப் பயந்த பலர் புகழ் முத்தம்** (8-ஆம் பத்து 4:5-6)

என்ற வரிகள் புலப்படுத்துவதைக் காணலாம்.

"சேரநாட்டுத் துறைமுகங்கள் அனைத்தும் கண்ணனூருக்கும் கொச்சிக்குமிடையில் அமைந்திருந்தன. அரேபியாவிலிருந்தும், கிரீஸீலிருந்தும் வாணிகச் சரக்குகளை ஏற்றிக் கொண்டு வந்த எண்ணற்ற நாவாய்கள் முசிறியில் செறிந்து கிடந்தனவென்று பெரிபுளுஸ் கூறுகின்றது. வைகாசி மாதந் தொடங்கி மூன்று நான்கு மாதங்கள் வரையில் சேரநாட்டுக் கடற்கரையின் மேல் வந்து மோதும் தென்மேற்குப் பருவக்காற்றை முதன்முதல் கண்டறிந்தவர் ஹிப்பாலஸ் (கி.பி. 45) என்ற கிரேக்கர் எனக் கூறுவர். பருவக் காற்றின் உதவியைக் கண்டுப்பிடித்த பிறகு யவன மாலுமி நடுக்கடலினுள்ளே கப்பலை முசிறிக்கு ஓட்டிக் கொண்டுவந்தான்." (கே.கே. பிள்ளை, தமிழக வரலாறும் பண்பாடும், ப.55)

உலகப் புகழ் பெற்றிருந்த முசிறித் துறைமுகப்பட்டினம் கி.பி. 14ம் நூற்றாண்டின் இடையில் வெள்ளப் பெருக்கினால் அழிந்து விட்டது. முசிறித் துறைமுகம் மூழ்கியதால் அதற்கு அருகில் கொச்சித் துறைமுகம் ஏற்பட்டது. முசிறிப் பட்டினத்துக்கு முயிரிக்கோடு என்றும், மகோதை என்றும், (மகோதைப் பட்டினம் சங்க காலத்துக்குப் பிறகு பெயர் வழங்கப்பட்டது) இலக்கியங்களும் ஆராய்ச்சியாளர்களும் குறிப்பிடுவதைக் காணலாம்.

## தொண்டி

சேரர்களின் துறைமுகப்பட்டினமாகவும் சோழர்களின் துறைமுகப்பட்டினமாகவும் தொண்டி என்ற பெயருடன் நம் தமிழகத்தில் இரண்டு துறைமுகங்கள் இருந்தன என்று இலக்கியங்களால் அறிய முடிகிறது.

அவற்றுள் ஒன்று மேற்குக் கடற்கரையில் அமைந்த நகரம் சேரர்களுக்குரியது. மற்றொன்று கீழைக்கடற்கரையில் அமைந்த நகரம் சோழர்களுக்குரியது என்றும் இலக்கியங்களால் தெரிகிறது.

ஒரு கடற்கரை நகரம் அழிந்த பிறகு அதே பெயருடன் வேறொரு நகரம் அமைந்திருக்க வேண்டும். இத்துறைமுகம் மேற்குக் கடற்கரையில் சேர நாட்டிலிருந்த தொண்டி நகரை ஐங்குறுநூற்றில் நெய்தற்பத்தைப்பாடிய அம்மூவனார் தொண்டிப்பத்து என்னும் தலைப்பில் பத்துச் செய்யுட்களைப் பாடியது சேரநாட்டுத் தொண்டியாகும். இந்தத் தொண்டிப்பட்டினம் கொங்கு நாட்டை அரசாண்ட அவர்களுக்கு உள்நாடாகிய கொங்கு நாட்டில் துறைமுகப்பட்டினம் இல்லாதபடியால் சேரநாட்டுத் துறைமுகப்பட்டினமாகிய தொண்டியை வைத்திருந்தனர் என்று தோன்றுகிறது.

இத்தொண்டி சேரமன்னரின் தாயத்தாருக்குத் தலை நகரமாக இருந்திருக்க வேண்டும். இத்தொண்டி முற்காலத்தில் பலநாட்டு மரக்கலங்களும் வந்து தங்கும் பெருந்துறைமுகமாக விளங்கியது என்பது பழைய நூல்களிலும் தாலமி என்னும் கிரேக்க ஆசிரியரது குறிப்புகளிலும் அறியப்படுகின்றது. அகலப் புழையை ( ஆலப்புழை ) அடுத்துள்ள தொண்டிப்பாயில் என்னும் சிற்றூரே பழைய தொண்டி எனக் கருதுகின்றனர் என்கிறார், ஆர். ஆளவந்தார். (இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள், தொகுதி 1, ப.144)

ஆடுகோட்பாட்டுச் சேரலாதன், வடக்கே தண்டாரணியத்திலிருந்து கொண்டு வந்த பசுக்களைத் தொண்டிக்கு கொண்டு வந்து தானங்கொடுத்தான் என்ற செய்தியைப் பதிற்றுப்பத்தின் மூலம் அறிய முடிகின்றது. இதனை,

"தண்டாரணியத்துக் கோட்பட்ட வருடைடையத்
தொண்டியுட் டந்து கொடுப்பித்து" (6ஆம் பத்து பதிகம், 3-4)

என்ற வரிகள் சுட்டுவதைக் காணலாம்.

இத்தொண்டி நகரின் தலைவன் சேரமான் கணைக்காலிரும்பொறை 'மூவன்' என்பவனையும் போரில் வென்று அவனுடைய பற்களைப் பிடுங்கி தன் வாயிற் கதவில் வைத்து அழுத்தினான். அத்தகைய சிறப்புப் பெற்றுத் திகழ்வது தொண்டி நகரமாம் என்பதை நற்றிணைத் தெரிவிக்கின்றது.

................................."மூவன்
முழுவலி முள்ளெயி றமுத்திய கதவிற்
கானலந் தொண்டிப் பொருநன்" (நற். 18:2-4)

என்று பொய்கையார் புகழ்கின்றார்.

"தொண்டித் துறைமுகத்தில் அக்காலத்தில் யவன வணிகர்கள் வந்து வாணிகம் செய்தனர். தாலமி (Ptolemy) என்னும் யவனர் இந்தத் தொண்டியைத் தைண்டிஸ் (Tyndis) என்று கூறியுள்ளார்". (கே.கே. பிள்ளை, தமிழக வரலாறு - மக்களும் பண்பாடும், ப. 54)

"குண கடல் திரையது பறைபுத நாரை
திணதேர்ப் பொறையன் தொண்டி முன்துறை
அயிரை ஆர் இரைக்கு அணவந்தா அங்கு" (குறுந்.128:1-3)

என்று சேர மன்னனின் தொண்டிப்பட்டினம் பற்றி குறுந்தொகையில் கூறப்பட்டுள்ளது.

## மாந்தை

மாந்தை என்னும் ஊர்ப்பெயர் கடற்கரை நகரமாக விளங்கியதைச் சங்க இலக்கியப் பாடலால் அறியமுடிகிறது. இந்நகரம் 'மாந்தை' எனவும் 'மரந்தை' எனவும் வழங்கப்பெற்றுள்ளது. இரண்டும் ஒரே ஊரின் பெயரே. ஆனால், இலக்கியங்களில் பாட வேறுபாடாக இடம் பெற்றிருந்தாலும் உரையாசிரியர்கள் மாந்தை என்றே குறிப்பிடுகின்றனர்.

சேரன் செங்குட்டுவனது மரந்தை என்னும் ஊர் அழகிய குதிரைகள் நிறைந்த நகராக இருந்திருப்பதை பரணர் பாடலால் அறிய முடிகிறது. இதனைக்,

குரங்குஉளைப் புரவிக் குட்டுவன்
மரந்தை அன்னஎன் நலம்தந்து சென்மே (அகம் 374:17-18)

என்ற வரிகள் புலப்படுத்தும்.

சேரன் செங்குட்டுவனின் முன்னோர்கள் கூட்டுத் தலைநகராகவும், மாந்தைப் பட்டினத்தில் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் பொன், வைரம், மணி முதலான பெருஞ்செல்வத்தை ஆம்பல் கணக்கில் (ஆம்பல் என்பது

கணிதத்தில் பெருந்தொகையைக் குறிப்பது) வைத்திருந்தான் என்பதை மாமூலனார் கூறுகிறார். (அகம்.127:3-10)

மேலும், இந்நகரைப் பண்டைய சான்றோர் நன்னகர் மாந்தை (அகம், 127) கடல் கெழு மாந்தை (நற்.395:9-10), துறை கெழு மாந்தை (நற்.35:6-7) என்று குறிப்பிடுவதை சங்க இலக்கியத்தின் மூலம் காண முடிகிறது.

## மாங்களூர்

சங்க காலத்தில் தமிழகத்தின் ஒரு பகுதியாக இருந்தது துளுநாடு. துளுநாட்டை நன்னன் என்ற அரசன் ஆண்டான். இவனது துறைமுகமாக மங்களூர் துறைமுகம் இருந்தது. நேத்திரவாதி ஆறு கடலில் கலக்கின்ற இடத்தில் இந்நகரம் காணப்படுகின்றது.

மங்களூர் துறைமுகத்தில் யவன வணிகர்கள் வாணிகம் செய்தார்கள். தாலமி என்னும் யவனர் இந்தத் துறைமுகப் பட்டினத்தை மகனூர் என்று கூறியுள்ளதாகவும் பிளைனி என்னும் யவனர் இதை "நைத்ரியஸ்" என்று கூறியுள்ளதாகவும் மயிலை சீனி. வேங்கடசாமி குறிப்பிடுகிறார். (சங்ககால வரலாற்று ஆய்வுகள், தொகுதி-1, ப.232)

நன்னனுடைய நாட்டில் சேரன் செங்குட்டுவன் கடற்கரைப் பக்கமாகப் புகுந்து அவனுடைய நாட்டைத் தாக்கிப் போர் செய்து வியலூர், கொடுகூர், நறவு முதலிய ஊர்களைக் கைப்பற்றினான். நார்முடிச்சேரல், ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் மற்றொரு புறத்தில் தாக்கியதால் வாகைப் பெருந்துறை என்னுமிடத்தில் இறந்துப் போனான். இதனால் துளுநாடு (கொங்கநாடு) சேரருக்குக் கீழ்ப்படிந்தது. இதனை,

ஊழின் ஆகிய உயர்பெருந் சிறப்பில்
பூமிநாட்டைப் படையெடுத்துத் தழீஇ
உருள்பூக் கடம்பின் பெருவாயில் நன்னனை
நிலைச் செருவின் ஆற்றலை யறுத்தவன்
பொன்படு வாகை முழுமுதல் தடிந்து
*குருதிச் செம்புனல் குஞ்சரம் ஈர்ப்பச்*
செருப்பல செய்து செங்களம் வேட்டு (4-ஆம் பத்து பதிகம்)

என்பதால் அறியலாம்.

மங்களூருக்கு மேற்கே கடலில் ஒரு சிறு தீவில் குறும்பர்கள் இருந்தனர். அவர்கள் வாணிகத்திற்காக அயல்நாடுகளிலிருந்து வரும் கப்பல்களைக் கொள்ளையடித்ததால் சேரநாட்டுத் துறைமுகப் பட்டினங்களுக்கு யவனக் கப்பல்கள் வருவது தடைப்பட்டன. இதனால் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் தன் இளைய மகனான செங்குட்டுவன் தலைமையில் கடற்படையை அனுப்பிக் கடற்கொள்ளைக் குறும்பரை அடக்கினான் (2ஆம் பத்து 1:12-16) செங்குட்டுவன் கடல் துரத்திக் குறும்பரை வென்றபடியால் யவனக் கப்பல்கள் சேரநாட்டுத் துறைமுகப் பட்டினங்களுக்கு வந்தன. அன்றுமுதல் கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன் என்று பெயர் பெற்றான்.

## நறவு

துளு நாட்டிலே மங்களூர்த் துறைமுகத்துக்குத் தெற்கே நறவு என்றும் துறைமுகப்பட்டினம் இருந்திருப்பதைப் பதிற்றுப்பத்தின் வாயிலாக அறிய முடிகிறது. நறவு என்னும் சொல்லுக்கு கள், மது என்னும் பொருளும் உண்டு. ஆகையால் நறவு என்னும் பெயருள்ள இத்துறைமுகப் பட்டினத்தைத் தமிழ்ப் புலவர் துவ்வா நறவு என்று கூறியுள்ளார். இதனை,

> **வருங்கடல் ஊதையின் பனிக்கும்**
> **துவ்வா நறவின் சாயினத் தானே** (பதிற். 6ஆம் பத்து 10:11-12)

சேர மன்னர் துளுநாட்டு ஆட்சியைக் கைக்கொண்டபோது, ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் இந்த நறவுத் துறைமுகப் பட்டினத்தில் இருந்தான் என்ற செய்தியைப் பதிற்றுப்பத்து உணர்த்துகிறது.

## முடிவுரை

பண்டைய தமிழகத்தில் அண்டைய நாடுகளுடன் பல்வேறு துறைமுகப்பட்டினங்கள் மூலமாகவும் தமிழர்கள் கடல் வாணிகம் செய்து வந்தமையைச் சங்க இலக்கியச் சான்றுகளாலும் வரலாற்று ஆராய்ச்சி குறிப்புகளாலும் தமிழர்தம் கடற்பயண வல்லமையைப் புரிந்து கொள்வதோடு மேலும் பல ஆய்விற்கு வழி காணலாம்.

# இலக்கியம் காட்டும் விலங்குகள்

## (முதல் பாகம்)

புலவர் சி. பாண்டுரங்கன்
ஆம்பூர்

'தாய்நாடும் தாய்மொழியும் கண்ணிகர்!'

இலக்கண, இலக்கியங்களின் துணை கொண்டு, இளையோர்க்கு, விலங்குகளை அறிமுகம் செய்வதே இக்கட்டுரையின் சீரிய நோக்கமாகும். தாய்நாட்டின் பெருமை மிகு நான்கு வகை விலங்குச் செல்வங்களின் சிறப்புகளை இதில் (பாகம் I) காண்போம்!

விலங்கு

"மாவும் மாக்களும் ஐஅறி வினவே",
"மக்கள் தாமே ஆறறிவு உயிரே"

எனத் தொல்காப்பியர், பொருள் - மரபு - பா 32 மற்றும் 33 ஆகியவற்றில் அறிமுகம் செய்கின்றார் ; மேலது, பா 28, ஓரிடத்தே வேர்விட்டு வளரும் புல் மற்றும் மரவகை ஓர் அறிவின எனத் தொடங்கி, தொடர்ந்து, நந்து, முரள் ஈரறிவு ; சிதல், எறும்பு மூவறிவு ; நண்டு, தும்பி நான்கறிவு எனப்பா 31 வரை நிரல்படுத்திக் காட்டியுள்ளார்.

பவணந்தியார், நன்னூல் - பெயரியல் - பா 261 வழி முன்வைக்கும் கருத்து :

"மக்கள் தேவர் நரகர் உயர்திணை
மற்றுயிர் உள்ளவும் இல்லவும் அஃறிணை"

நகம், பல், கொம்பு, தந்தம், நச்சுப்பை, கொடுக்கு, கடிவழி நோய் பரப்பல், மிதித்தல், துவைத்தல், துரத்துதல், சீறி இரைத்தல், பாய்தல், முட்டுதல், இரைபற்றல் போன்ற இடர்களிலிருந்து, தாம் தப்பி, நலமுடன் வாழ, விலங்குகளை விலக்கியும், விலங்குகளிடமிருந்து விலகியும் இருத்தலால், விலங்கு எனப் பெயரிட்டனர் போலும்! மா = விலங்கு :

"ஆவும் 'மா'வும் சென்றுணக் கலங்கிச்
சேறொடு பட்ட சிறுமைத் தாயினும்
உண்ணீர் மருங்கின் அதர்பல ஆகும்.........." புறம் 204

நாகரிக வளர்ச்சியால், பால் பெற ஆடு - மாடு, உழவுக்குக் - காளைகள், படை வெல்ல யானை - குதிரை, வேட்டைக்கு நாய் எனப் பழக்கி, வாழ்வில் உயர்ந்தாலும், மாந்தர், எவ்விலங்கு காணின், எத்தனை முழம் தூரம் ஒதுங்கி ( விலகி ) யிருக்க வேண்டும் எனப் பாவொன்று, நகைச்சுவை ததும்ப அறிவுரை வழங்குகிறது !

## அரிமா ( சிங்கம் )

இங்கிலாந்துக்குச் சென்று, அந்நியர் ஆதிக்கத்தை எதிர்த்து அவர்மொழியில் பேசிவந்த வெள்ளிநாக்கு விடுதலை வீரர், சீனிவாசர், 'சிங்கத்தின் பிடரியைக் குகையில் உலுக்கியவர்' எனப் புகழ் பெற்றார். காட்டரசன் எனத் தொன்மை முதலே வழங்கப்படும் விலங்கரசன் அரிமா. தேசப் பெருமை கூட்டும் அடையாளம் அரிமா, வனத்தில் விலங்கினம் அஞ்சுமாறு, பெருமுழக்கமிடும். அப்போது, அதன் இருப்பிடம் பிற உயிரினங்களால் அறியப்படுகிறது. பசித்த பிறகுதான், வேட்டைக்குப் புறப்படும் ! பசி தீர்ந்தபின், எதிரிலேயே இரைமா சென்றாலும், பற்றாது. ஊன், மறுநாள் உண்ண இருப்பில் வைக்காது! ஆண் சிங்கம், பிடரியும் தலையும் சார்ந்த பகுதியெல்லாம் அடர்ந்து வளர்ந்த முடியழகுடன் கம்பீரமாக நிற்பதும், நடப்பதும், சிங்கக் கூட்டம் சுற்றி உலவ, பெருமூங்கில் புதர் அருகே படுத்திருத்தலும் அரிய, அழகிய காட்சிகள் ! கூட்டமாகச் சென்று, பேரிரை பற்றி உண்பன அரிமாக்கள். பெண்சிங்கம் தனித்துச் செல்ல நேரும் சமயம், அண்மையில் புலி உலா காணின், அஞ்சி, விரைந்து கூட்டத்தில் சென்று சேரும்; தேசியப் பூங்கா, கவசப் பேருந்தினுள் பாதுகாப்பாக அமர்ந்து பார்த்தவண்ணம் செல்லும் பார்வையாளருக்கு, இரு இனங்களுக்கும் இடையே, உயரமான இரும்பு வேலியும், ஆழமான அகழியும் இருப்பது தெரிந்து நிம்மதிப் பெருமூச்சு விடல், விலங்கினம் அறியாததன்றோ? படைப்பின் அற்புதம் தான் என்னே ! இவ்விலங்குகளால், காடு செழித்து வளர்ந்தோங்கி, பல்லுயிர்ப் பெருக்கம் நிகழவும், பெருமழை பொழிந்து பயிரும் உயிரும் செழிக்கவும், உணவுச் சங்கிலி ஒழுங்கமையவும் வாய்ப்பாகின்றதன்றோ? விலங்குகளின் நல்வாழ்வில், மாந்தரின் நல்வாழ்வும் அடங்கியுள்ளதன்றோ? அதனால்தான், மறைமலையடிகள் முதலாகப் பலரும், காடு செழிக்க, விலங்கினம் செழிக்க, எழுதினர் !

'சிங்க நோக்கு' உவமை. 'சிம்ம வாகினி' ஆன்மிகத் தொடர் ! இராசியுள் ஒன்று, 'சிம்மம்'. "ஆண் சிங்கம் போன்ற வலிமை மிக்கவனாக, அரசாட்சி

செய்தான், திருமாளவளவன் என்னும் கரிகாற் சோழன், எனப் புகழ்ந்து பாடுகிறார், கடியலூர் உருத்திரங்கண்ணனார் :

"அரிமா அன்ன அணங்குடைத் துப்பின்
திருமா வளவன் தெவ்வர்க்கு ஓக்கிய
வேலினும் வெய்ய கானமவன்
கோலினும் தண்ணிய தடமென் தோளே !"

– பட்டினப்பாலை நிறைவு வரிகள்

அரசன் அமரும் இருக்கை, அரியாசனம் எனப்படும் :

"அரிமா சுமந்த அமளி மேலானை..." – பொருநர், தனிப்பா 2

"அரிமா = சிங்கம்" என்னும் கலி., 103 பாவரி :
அரிமாவும் பரிமாவும் களிறும் கராமும்
பெருமலை விடரகத்து ஒருங்குடன் குழீஇ.........

அரிமா முழங்கின் விலங்கினம் ஓடுதல், கலி., 15 பாவில் உவமையாளனது : (இங்கு, அரிமான் = சிங்கம்)

"அரிமான் இடித்தன்ன, அஞ்சிலை வல்வில்
புரிநாண், புடையின், புறங்காண்டல் அல்லால்....."

ஆசியக் காடு வாழ் சிங்கத்தின் தனிச்சிறப்பு பிடரிமயிர், சங்கப்பா பதிவிலும் உண்டு :

தார்அணி எருத்தின் வாரல் வள்உகிர்
அரிமான் வழங்கும் சாரல்............ பதிற்று, 12.

அரசனின் வலிமைக்கு, அரிமான் உவமை :

வியல்உளை அரிமான் மறம்கெழு குரிசில்....மேலது, 88

அஞ்சாத ஆண்சிங்க நடை :

............. அடுக்கம் புலம்பக் களிறு அட்டு,
உரும்புஇல் உள்ளத்து அரிமா வழங்கும்
பெருங்கல் நாடன் வரவு.......... – நற்றிணை 112

**அண்மைச் செய்தி :** சிங்கம் முழங்குவது, சிலகல் தூரம் வரை கேட்கும் - ஆண் சிங்கத்தின் தலைமையில் மூன்று பெண் சிங்கக் கூட்டம் வாழும் - ஈராண்டில் ஒருகுட்டி ஈனும் - சராசரி வயது 15 - ஒற்றையாக உள்ள சிங்கத்தைப் புலி வெல்லக் கூடும். சிங்க இனக் காப்புப் பூங்கா, முதன்மை இடம், குசராத்து, கிர்காடு ! மழை வரம் தரும் மரங்களின் பாதுகாப்பு, உயிரின இயற்கைச் சமநிலை போன்றவற்றில் சிங்கங்களின் பங்குண்டு ! பாதுகாத்தல் கடன்.

## புலி ( தேசிய விலங்கு )

நன்னூல், உவம உருபுகளை போலப் புரைய.... எனத் தொடங்கும் பாடலில் சுட்டுகிறது. சங்கர நமச்சிவாயர் ( மற்றும் சிவஞானர் ) விருத்தியுரை தரும் எடுத்துக்காட்டுகள்.

1. புலியைப் போலப் பாயுஞ்சாத்தன்
2. புலியன்ன கொற்றன்

தொல்காப்பியம், பொருளதிகாரம், உவம இயல், பா 272 எடுத்துக்காட்டு, இளம்பூரணம் : புலிபோலப் பாய்ந்தான். பா 283 எ-டு:

**புலிபிறப்ப வொவ்வித்தோற்றலின்;**
**புலியென்னக் கலிசிறந்துராஅய்.**

பழமொழிகள் சில ; அர்த்தங்கள் பல :

**புலி பசித் தாலும் புல்தின் னாதே !**

**புலி அடிக்கும் முன்னே கிலி அடிக்கும் !**

**புலிக் கஞ்சியவரைத் தன்னைச் சுற்றிலும் நிறுத்தினான் !**

**புலியின் காதைத் திருகினால், மதயானை !**

**புலி, பூனையைக் கண்டு அஞ்சுமோ?**

**புலியைத் தின்னும் செந்நாய் உதவுமா அல்லது**

**புல்தின்னும் பசு உதவுமா?**

## ஊக்கமே புலியின் வெற்றிக்குத் திறவுகோல்

**பரியது கூர்ங்கோட்ட தாயினும் யானை**
**வெரூஉம் புலிதாக் குறின்** - திருக்குறள், ஊக்கம் உடைமை

## புதுமொழிகள் சில, சிந்தனைகள் பல :

தேசியப் பூங்கா இருக்க, தினம் கவச ஊர்தி இருக்க, தனியாய் ஏன் புலிக்காடு செல்கின்றாய்.... தவியாய் ஏன் தவிக்கின்றாய்?

கழுத்தில் உலோக உருளை அணிந்த நாய், காட்டுப் புலிக்கு அஞ்சவேண்டாம்; கருணை அறவழி வாழ்வோர், கொடும்பகை எதற்கும் அஞ்சவேண்டாம்!

சான்றோர், அறம்அல்லா நெறிக்கு அஞ்சுவர்; சீறும் புலி தீஎரி கண்டஞ்சும்!

காட்டோரத் தெருநாய், கடும்புலிக்கு விருந்தழைப்பு!

காட்டோர நாட்டுக்கோழி, கடுஞ்சிறுத்தைக்கு விருந்தழைப்பு!

புலிவாழும் காட்டினாலே, புவிமகிழ மழைவரவு!

அறம்பிறழ்வோன் வீழ்வான்; ஆட்கொல்லியாய் மாறும் புலியும் வீழும்!

புதர்ஓரம் போகாதே ; புலி கண்ணில் சிக்காதே!

தனித்து வாழ்ந்தால் தழைக்கும் புலி வாழ்வு ; சேர்ந்து வாழ்ந்தால் சிறக்கும் சிங்கவாழ்வு!

புலிஎடை மிகுந்தால், சிங்கத்தின் பகையாகும்; மாந்தர் மீஎடை மிகுந்தால் தம் உடல் நலத்திற்கே பகையாகும்!

புள்ளிமான், பொன்மான் பெருமை, புலி அறியுமா?

நகத்திற்கு, மீசை சளைக்கவில்லை புலிக்கு!

வெள்ளைப் புலிக்கு, வெண்கலமணி கட்டுவது யார்?

முதலைக்கும் புலிக்குமே சரிப்படும்!

## புலிக்கு அஞ்சுதல்

'ஐயோ!' எனின்யான் புலிஅஞ் சுவலே ;
அணைத்தனன் கொளினே, அகல்மார்பு எடுக்கவல்லேன்....

– வன்பரணர், புறப்பாவில் காட்டிய போர்முனைக் காட்சி

புலிக்குருளை இரைகொள் இடத்தை, உதிர்ந்த நெல்லிக்காய்கள் மறைத்தல் :

**"சுரந்தலைப் பட்ட நெல்லிஅம் பசுங்காய்**
**மறப்புலிக் குருளை கோள்இடம் கரக்கும்....."** குறு. 209

வேங்கைப்பூ உதிர்பாறை, புலிக்குருளை போலிருத்தல் :

**"கருங்கால் வேங்கை வீஉகு துறுகல்**
**இரும்புலிக் குருளையின் தோன்றும் காட்டிடை......"** குறு. 47

குறுந்தொகையில் மேலும் ஆறு பாக்கள் புலி பற்றிய குறிப்பு ஏந்தியுள ; பிற இலக்கியங்களில் (தோராயம்) இக்குறிப்புள்ளவை : 76 பாடல்!

நற்றிணை 1, ஐங்குறு 7, பதி. 5, பரி-1, கலி. 10, அகம் 33, புறம் 8 மற்றும் பத்துப்பாட்டில் 3. இவ்விலங்கின் எண்ணிக்கை ஓங்கியிருந்ததால், காட்டுவளம் நன்றாகச் செழித்தும், அதன் பயனாய் யானைக் கூட்டங்கள், மான் கூட்டங்கள் எனப் பல்லுயிர்ப் பெருக்கமும் சிறந்து விளங்கிய நிலை, உள்ளங்கை நெல்லிக்கனி எனத் தோன்றும். மஞ்சள் கருமை கலந்த வரிப்புலி, **TIGER** என ஆங்கிலத்தில் வழங்கப்படுதல், வேகம் / அம்பு வேகம் எனும் கிரேக்கச் சொல் அடிப்படையில் இருக்கலாம் எனச் சிலர் கருதுவர். ஆனைமலையில் சிறுத்தைகள் உளவாம் **(LEOPARD)** ; மரஉச்சிவரை செல்லக்கூடியது; வெள்ளை மஞ்சள் கட்ட உடல் தோலமைப்பு. வெள்ளைப் புலியினம், கங்கை கடலில் கலக்கும் பசுமைக் காடுகளில் உள. (கறுஞ்சிறுத்தையும் வேறுகாடுகளில் உண்டாம்) பொதிகை மற்றும் மேற்குத் தொடர்மலை சில இடங்கள் முதலான காடுகளில் புலிஇனம் வாழ்கின்றது. நாட்டின் வனவிலங்குக் காப்பகங்களால், சிங்கம், புலி, யானை முதலிய தேசிய முக்கியத்துவ விலங்கினங்கள் காக்கப்படுவது, போற்றத்தக்கபணி. புலி இனம் காக்கவும், புலிகளால் மக்களுக்கு ஆபத்தின்றிக் காக்கவும், விரும்பிச் செயல்பட்ட, நைனிடால் ஜிம்கார்பெட் ( டு, துரை ) பெயரால், தேசிய வனவிலங்கியல் பூங்காவை, முதன் முதலாக, மிகவும் சிறப்பாக அமைத்ததால், புலிகளின் எண்ணிக்கை பெருக வழிவகுத்தது அரசு ! விலங்கினங்களைக் காக்கும் கடமை, எல்லோர்க்கும் உண்டு!

## யானை

இலக்கணம், சங்கப் பாடல்கள் முதல், சிறுகதை, பழமொழி வரை மல்கிப் பரவி, எளியோர் முதல் செல்வர் வரை, குழந்தை முதல் முதியோர்

வரை, அனைவர் மனங்களிலும் நின்று நிலவி, ஓவியம், சிற்பம், ஆன்மீகம் ஆகிய துறைகளிலும் கிளை பரப்பி, அதிசய விலங்காக அசத்துவது, யானை!

ஆனை அசைந்து தின்னும், வீடு அசையாமல் தின்னும்; யானைவரும் பின்னே, மணிஓசை வரும் முன்னே ; ஆண்டிக்கெதற்கு அம்பாரக்கணக்கு...; யானை படுத்தாலும் குதிரை மட்டம் ; யானை ஆயிரம் பொன் ; மாடுகட்டிப் போரடித்தால் மாளாது செந்நெல் என்று ஆனைகட்டிப் போரடிக்கும் அழகான தென்மதுரை ; யானை மீதமர்ந்தவன் (வெற்றிலைக்கு) சுண்ணாம்பு கேட்டது போல... போன்ற பழமொழிகள், மக்களிடையே இவ்விநோத விலங்கு பெற்றிருந்த செல்வாக்கை நாம் அறியலாம்.

இரவிவர்மாவின் இலட்சுமி ஓவியத்தில், இருபக்கமும் உள்ள யானைகளைக் கண்டு மகிழ்வர். வேலூர்கோட்டை, சலகண்டேசுவரர் திருக்கோயில் மண்டபச் சிற்பங்களில், குழந்தைகளுக்கு எட்டும் உயரத்தில் உள்ள ஓர் சிற்பத்தருகே, கூட்டம் வியந்து காண்பது, எதிர் எதிர் நிற்கும் காளையும் யானையும்; காளையின் கொம்புப் பகுதி, யானையின் இருதந்தங்களாக மாறிக் காட்சிதரும் கலைஞன் கைவண்ணம், யானை துதிக்கை உயர்த்த் நிற்கும் நிலை காட்டும்! அற்புதச் சிற்பம்!

நன்னூல் – சொல் – பொது – நிரல் நிறைப் பொருள்கோள் பெயரும் வினையும்... எனும் பாடலுக்கு, ஆறுமுக நாவலர் உரை காட்டும் நான்கனுள் மூன்றாம் எ – டு : (களிறு, கட்டுத்தறி)

**"களிறும் கந்தும் போல நளிகடல்**
**கூம்பும் கலனும் தோன்றும்**
**தோன்றன் மறந்தோர் துறைகெழு நாட்டே!"**

தொல்காப்பியத்தில், யானை, களிறு : (புறத்திணை இயல், பா 14)

**'தானை, யானை, குதிரை....'**
**'களிறு எறிந்து எதிர்ந்தோர் பாடும், களிற்றொடு....'**

மரபு இயல் பா 72 :

**'..........களிறும்.... அரசர்க் குரிய'**

பெண் யானையும் வழித் தோன்றலும், மரபியல் 52, +15 :

**" 'பிடி'என் பெண் பெயர் யானை மேற்றே**
**யானை... கன்று எனற்கு உரிய."**

இவற்றைப் படிக்கும் போதும், இம்முப்பெயர்களும் ( கன்றுடன் 4) சங்க இலக்கியத்திலுள்ளதை ஒப்பிடும்போதும், மிகப் பழங்காலத்திலேயே, மனிதரின் தோழனாக, அரசன் போற்றும் அன்புச் சின்னமாக, யானை இனம் மாறி, பகைக் கோட்டையைத் தூர்க்கவும் அல்லது தகர்க்கவும், நதி கடக்கும் அசை உயிர்ப் பாலமாகவும் உதவியதை அறியலாம். யானைஉலா, பல. ஏற்றுரி போர்த்தமைத்த முரசின் ஏந்தல் யானை. வானுயர் கோபுரம் கட்டக் கல் சுமத்தலோ, மரத்தை உருட்டி அடுக்குவதோ, யானைக்கு விளையாட்டு போன்ற பணி ! பெரிய கோவில் கட்டும் போதே, யானை கட்டுத் தறியும், கல் சங்கிலியழகு தோரணமாக, நெடிய நாற்றூண் மண்டபமும் அமைப்பதுமுண்டு ! புலவர்க்கு அரசன் கொடை தருவனவற்றுள் யானை உயர்ந்தது, பொன் போல, நில (பூ) தானம் போல !

**"கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்**
**மெய்வேல் பறியா நகும்;"**

"...... கண்ணஞ்சா, வேலாள் முகத்த களிறு என்னும் திருக்குறள் 774, 500 ஆம் பாடல்கள், போர் வெல்லும் களிறுகளைப் புலப்படுத்தும் சான்றுகள்.

களிறு, ஆண் யானையைக் குறிப்பதோடு, சுறா, அத்தநட்சத்திரம் போன்ற பொருளும் தரும் ; பிடி, பெண் யானையைக் குறிப்பதோடு, 13 பெயர்ப் பொருளும், 11 வினைப் பொருளும் ஏற்கும் ! யானைவாரி, யானை கட்டுகிற ! பிடிக்கிற இடம் ; யானையேற்றம் சவாரிக்கலை; யானைத்தீ தணியாத பசி (எ-டு)

**"யானைத் தீநோய் அகவயிற் நடக்கிய**
**காயசண்டிகை....." "தந்தித்தீயால் தனித்துயர் உழந்து"**

**... மணிமேகலை**

தன் மதயானைகளை, எட்டுத்திக்கிலும் திசைக்களிறுகள் போல நிறுத்திய வெற்றி.... என, அரசவெற்றி போற்றப்படுவதை, நன்னூல் சிறப்புப் பாயிரம் நவிலும் :

**".... தன்மத வாரணம்**
**திசைதொறும் நிறுவிய திறல்உறு தொல்சீர்.... !"**

வேழம், வாரணம், கைம்மா, களபம், தந்தி, நால்வாய் குஞ்சரம் என்பன போன்றவை, யானையின் வேறு பெயர்கள் ! யாழ் இசைக்கு யானை கட்டுப்படும் :

"காழ்வரை நில்லாக் கடுங்களிற் றொருத்தல்
யாழ்வரைத் தங்கியாங்கு...." கலி. 2

தசராவிழா முதலாகப் பல விழாக்களில் யானைகள் அலங்கார ஒழுங்குடன் பங்கேற்று, காட்சியின் மகிழ்ச்சி ஊற்றாவதை இன்றும் காணலாம். யானைகளைப் பழக்குதல், சங்க காலத்திலேயே தொடங்கி விட்டது.

"தேம்படு கவுள சிறுகண் யானை
ஓங்குநிலைக் கரும்பொடு கதிர்மிடைத் தியாத்த
வயல்விளை இன்குள குஃணாது நுதல்துடைத்து
அயில்நுனை மருப்பின்தம் கையிடைக் கொண்டென
கவைமுட் கருவியின் வடமொழி பயிற்றி...... முல்லை, 31-35,

"நெடுஞ்சுழிப் பட்ட கடுங்கண் வேழத்து
உரவுச் சினந்தணித்து பெருவெளிற் பிணிமார்
விரவுமொழி பயிற்றும் பாகர் ஓதை" ..... மலை., 325-327.

## யானை ஏற்றம் :

"…. நம்வலைப் பட்டதோர்
புத்தியானை வந்தது காண்பான்யான் தங்கினேன்....." கலி. 97

(குஞ்சரம், வேழம் போன்ற சொற்களன்றி), யானை, களிறு எனும் இரண்டே சொற்களால், அகநானூறு ஒன்றில் மட்டும், தோராயம் 'யானை' பற்றி 90 பா, 'களிறு' பற்றி 46 என மொத்தம் 136 குறிப்புகள் உள என்பதை அறியும் போது, மனம் வியப்பின் உச்சத்தில் நிற்கின்றது ! இவ்விலங்கு ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகத் தமிழர் வாழ்விலும் வளத்திலும், நாட்டின் பாதுகாப்பிலும், விழாக்களில் அணிவகுத்தும் ஆற்றிய ஈடும் இணையும் சுட்டிக் காட்டவே இயலாத பங்கு, மனக்கண்முன் தோன்றி, அதன் பீடும் பெருமையும் வானளாவ உயரச் செய்கிறது !

"யானை வேட்டுவன் யானையும் பெறுமே" என்னும் வழி நினைவிற்கு வந்து, சிந்தனையைத் தூண்டுகிறது ! யானை வேட்டுவன், வலைவிரித்தோ, மண் அகழ்ந்து இலை தழை மூடி வைத்தோ, யானையை வீழ்த்தி, அதனைப் பழக்கும் ஒருவனிடம் தான் தந்திருப்பான் என எண்ணவைக்கின்றது. ஏனெனில், இச்சமுதாயத்திற்கே பயன் விளைக்கும் ஓர் உன்னதத்தை, நாட்டு நலன் காக்கும் கருவியை,

"..... புதையம்பிற்

பட்டுப்பா மூன்றும் களிறு என, ஊக்கம் உடைமைக்குச் சான்றிதழை வள்ளுவனாரின் வாய்மொழியில் பெற்ற பெருமையின் அடையாளத்தைத் தனக்கென மட்டும் பயன்படுத்தியிருக்கமாட்டான் ! தனக்குக் கிடைத்த அபூர்வ மரம், வீணை செய்வதற்குரியது என அறிந்தவன், அதனைச் செய்வான்; விறகாக்கி வீண் செய்யான். மூங்கில் காடெல்லாம் தேடித் தேர்ந்து, புல்லாங்குழல் செய்யக் கொண்டு வந்த மூங்கிலைத் தேநீர் தயாரிக்க எரியிடார்! யானையின் தந்தம் கட்டில்கால் ஆனதை, ஆங்கிலக் கவிதையில் சொன்னார் கவிக்குயில் சரோசினி; ஆனால், அவருக்குப் பன்னூறாண்டு முன்னரே, தமிழ்ப்பாக்குயில், அக்கருத்தைத் தம் பாவில், பதிந்து வைத்துள்ளார் இப்படி :

"குத்து விளக்கெரியக் கோட்டுக்கால் கட்டில்மேல்
மெத்தென்ற பஞ்ச சயனத்தின் மேலேறி..."

– ஆண்டாள் திருப்பாவை.

யானையின் அரிய செயல், திருமாவளவன் அரசுரிமை பெற்றதற்கு உவமை : .... "அருங்கரை கவியுக் குத்தி, குழிகொன்று, பெருங்கை யானை பிடிபுக் காங்கு..." – பட்டினப்பாலை.

தனக்கு வாய்த்த வாழ்நாளில் அரிய சாகசம் புரிந்த யானை, அதன் பின்னரும் தன் பெயர் விளங்க, என்பும் உரியர் பிறர்க்கு என்னும் தொடரின் புதிய விளக்கமாகக் கொடை நல்கிய பொருளே, தந்தம் ; கட்டில் காலாய்ப் பெருமை கூட்டியது, அயல் நாட்டுச் செலாவணியும் ஆகி, நாட்டு மக்கள் பொருள் இறக்குமதியின் சாவியானது; வாணிகம் பரிணமித்தது என யூகிக்கலாம்.

உயர்நிலைப் பள்ளியில் பொறியியல் பால பாடம் பயிற்றுவித்த ஆசிரியப் பெருந்தகை கூறிய ஓர் குறிப்பு, யானையின் பங்களிப்பு, சமாதான காலத்திலும் பெரிதே என அறிய வைத்தது.

தஞ்சைப் பெரிய கோயில் கோபுரப் பெருங்கல் எடுத்துச் செல்ல, சாரமேடு - சாரப்பள்ளம் இடையே பாதை அமைக்கப்பட்டு, யானைகளின் உதவியால் மேலேற்றப் பட்டதாம். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் ஒரு பொறியியல் அற்புதம் நிகழ, அவை பக்கபலமாய் நின்றுள்ளன.

நூறாண்டு தழைத்தோங்கி முற்றிவேருடன் காய்ந்த பின், சாந்தம் மணக்கும் வாழ்வை ஏற்றல்போல், எழுபதாண்டும் அதன் மேலும் வாழ்ந்து கானகத்தின் அடர் புதரிடை யானை விட்டுச் சென்ற தன் கர்ப்பழகாம் கொம்பு, மகளிர் கையில் உலக்கையாகி, வள்ளைப் பாட்டுப் பாடிய வண்ணம், மூங்கில் நெல் குற்றுதற்கும் பயன்பட்டது.

**"பாடுகம் வாவாழி தோழி வயக்களிற்றுக்**
**கோடு உலக்கையாக நல்சேம்பின் இலைகளகா**
**ஆடுகழை நெல்லை அறைஉரலுள் பெய்து இருவாம்**
**பாடுகம்வா தோழி....."** கலி. 41

**"...யானைக் கோட்டால் வெதிர்நெல் குறுவாம்நாம்....."** கலி, 42.

**சாந்து உரலில், முத்துடைய தந்த உலக்கை :**

**".........முகைவளர் சாந்துஉரல் முத்துஆர் மருப்பின்**
**வகைசால் உலக்கை வயின்வயின் ஓச்சி...."** கலி. 40

**வெண்ணொங்குற்ற, தந்தமும் சந்தமும் உலக்கைகள் :**

**"வேங்கை தொலைத்த வெறிபொறி வாரணத்து**
**ஏந்து மருப்பின், இனவண்டு இமிர்பு ஊதும்**
**சாந்த மரத்தின், இயன்ற உலக்கையால்,**
**ஐவன வெண் நெல், அறைஉரலுள் பெய்து, இருவாம்...."** கலி. 43.

- தொடர்ச்சி அடுத்த இதழில்....

# பெண்களின் கூந்தலுக்கு இயற்கையிலேயே மணமுண்டா?

திருமதி. இராசம் மரகதம்

நக்கீரருக்கும், சிவபெருமானுக்கும் இடையே கருத்து வேறுபாடு உண்டாக்கிய குறுந்தொகையின் 2வது பாடல் :

கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத்தும்பி
காமம் செப்பாது கண்டது மொழிமோ?
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியல்
செறி எயிற்று அறிவை கூந்தலின்
நறியவும் உளவோ நீ அறியும் பூவே ?

## இயற்கை மணம்

(1) சிவபெருமான் சடையிலே இயற்கை மணம் உண்டு.

(i) துணரின் மலர்க்கந்தம் துன்னி நின்றானே ! - திருமந்திரம்

(ii) வெறிகமழ் சடையுடை யோன் - சிவ வாக்கியம்

(2) உலக அன்னையின் கூந்தலிலே இயற்கை மணம் உண்டு

(i) மருவார் குழலி மாதோர் பாகமாய்-திருஞானசம்பந்தர் தேவாரம்

(ii) மருவுற்ற மலர்க் குழலி மடவார் - அப்பரடிகள்

(iii) வண்டார் குழலி உமை நங்கை - சுந்தரமூர்த்தி சுவாமிகள்

(iv) மணங்கமழ் பூங்குழல் மங்கை - திருமூலர்

(3) அமிர்தம் உண்டோர் அனைவருக்கும் மயிர்க்கால் தோறும் நறுமணம் வீசும் என்று திருமூலர் விளக்குகிறார்.

"ஓதும் மயிர்க்கால் தொறும் அமுதூறிய" என்பது திருமந்திரம்

ஆக, தேவர்களும் அமரர்களும் அமுதம் உண்டவர்கள் அல்லவா? எனவே அவர்களது மயிர்க்கால்கள் தோறும் நறுமணம் கமழும் இல்லையா?

(4) மண்ணுலகில் மனிதராய்ப் பிறந்தவர்களுள் தகுந்த குருவின் ஆசியோடு ஞானத்தவம் செய்வோர் உடலில் அமிர்தம் ஊறும் என்றும் அதனால் மயிர்க்கால்களில் மருக்கொழுந்து, கஸ்தூரி முதலிய நறுமணம் கமழும் என்றும் மெய்ஞ்ஞானப் பெரியோர்கள் உறுதியாகக் கூறியுள்ளனர்.

(i) **"வாசனையே சாதனமாய் வகுத்துக்காட்டும்"** – காகபுசண்டர்

(ii) **"மருவிலே எழுந்து வீசும் வாசனையதாகுவன்"** – சிவவாக்கியர்

(iii) "மலராத பூவின் மருவின் **மணத்தை"** – திருமூலர்

(iv) "கண்டு நிறை **கஸ்தூரி** வாசம் தேகம்" – கோரக்கா

இயற்கையான நறுமணம் மனித உடலில் கமழும் என்ற கருத்து புதுமையாகத் தோன்றினாலும் ஞான மார்க்கத்தில் உள்ளவர்கள் அனுபவபூர்வமாக உணர்கின்ற உண்மை இது.

## குறுந்தொகைப் பாடலின் முழுமையான பொருள் :

"மகரந்தத்தை ஆராய்ந்து உண்ணும் வாழ்க்கையை உடைய அழகிய சிறகினை உடைய வண்டே !

நான் பயிலும் தவத்தைத் தழுவி என்னிடம் நட்புப் பொருந்திய, மயிலின் இயல்பையும், அழகிய பற்களையும் உடைய எனது மனைவியின் கூந்தலைப் போல், நீ அறியும் பூக்களுள் நறுமணம் உடைய பூக்கள் உண்டோ? என் நிலத்து வண்டு ஆதலால் யான் விரும்பியதைக் கூறாமல், நீ கண்கூடாக அறிந்ததையே சொல்வாயாக !"

திருவள்ளுவப் பேராசான் தமது வான் மறையிலே, காமத்துப் பாலிலே, நலம்புனைந்துரைத்தல் என்றோர் அதிகாரம் வகுத்துள்ளார். அன்பின் மிகுதியாலே, இல்லாத அழகை இருக்கின்றது போன்று புனைந்துரைத்தல் தான் நலம் புனைந்துரைத்தல் என்று விளக்கம் கூறப்படும்.

ஆயினும் மேலே கண்ட ஆதாரங்களிலிருந்து தவம் பயின்று வந்த மன்னனுடைய மனைவிக்கு முதலில் அமிர்தம் ஊறி, மயிர்க்கால் தோறும் இயற்கையான மணம் கமழத் தொடங்கியது என்றும், அதன்பிறகே மன்னனுக்கும் அவ்வாறே நிகழ்ந்திருக்கும் என்றும், அதனால் முன்பே இந்த உண்மையை அறிய இயலவில்லை என்றும், உலகியல் அறிவு மட்டும்

கொண்ட மனிதர் எவராலும் மன்னனின் ஐயத்தைத் தெளிவாக்க இயலாது என்பதால், சிவபெருமானே பாடல் இயற்றி உலகுக்கு உணர்த்தினான் என்றும் தெளிவாகின்றது.

## கீழ்க்கண்ட ஆதாரங்கள் மேற்கண்ட கருத்துக்களை வலியுறுத்துவதைக் காணலாம்

(i) ஏறத்தாழ 1400 ஆண்டுகளுக்கு முன்னர் அரேபியா நாட்டில் மக்கமா நகரில் தோன்றி மதினாவில் அடக்கமான மெய்ஞ்ஞானப் பேரரசர், இறைத் தூதுவர் நபிகள் நாயகம் அவர்களுடைய உடலிலிருந்து **கஸ்தூரி போன்று** இயற்கையான நறுமணம் வீசியது என்று,

தக்கலை பீர் முகம்மது ஒலியுல்லாஹ் அவர்கள் ஞானப் புகழ்ச்சியிலே பின்வருமாறு கூறியுள்ளார்.

***"கன்னலுற்று இனிந்த வாசம் கமழும் கஸ்தூரி மேனிப்***
***பொன்னிறத்து அழகு போன்ற புகழ் நபி"***

(ii) பிராணாயாமம் பயில்கின்றவர்களின் உடல் நோயின்றி, பருமனின்றி சிவந்து காணப்படும்; குரலில் இனிமை இருக்கும்; உடலிலிருந்து நறுமணமும் வீசும்!

**ஸ்ரீ சுவாமி சிவானந்தா (Wisdom Light என்ற நூலில்)**

## தீர்வு

தமிழ்ச்சங்கத்தின் தலைமைப் புலவரான நக்கீரர் சிவபூசைச் செல்வராகவும் சிறந்து விளங்கினார். ஆயினும் அவர் ஞானி அல்லர். உலகியலறிவுடைய மனிதரே! எனவேதான் சிவபெருமான் இயற்றிய பாடலின் மெய்ப்பொருளை அவரால் உணர இயலவில்லை!

எனவேதான் புலவர் போல வந்திருப்பவன் சிவபெருமான் என்று தெரிந்த பின்னரும், 'நெற்றிக் கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே!' என்று எதிர்த்து வாதாடினார்; தண்டனையும் பெற்றார்!

# பாரதி கண்ட புதுமைப்பெண்

திருமதி. டாக்டர் செ. ரெஜினா

## முன்னுரை

பெண்ணுக்கு உரிமை கொடுக்கும் நாடு அடிமைப்படுவதில்லை என்பது பாரதியின் கருத்து. பெண்களின் அறிவைப் பாழ்படுத்தி ஆடவர்கள் அவர்களை அடிமையாக்கி விட்டனர். மண்ணுள் வாழும் சில மூடர் நல்ல மாதரறிவைக் கெடுத்து விட்டனர். அதனால் அவர்கள் உரிமை வேட்கை கொண்டு புரட்சித் தீயை மூட்ட வேண்டும் என விரும்புகிறார் பாரதியார்.

"மாதர் தம்மை இழிவு செய்யும்
மடமையைக் கொளுத்துவோம்
வைய வாழ்வு தன்னி லெந்த
வகையினும் நமக்குள்ளே
தாதர் என்ற நிலைமை மாறி
ஆண்களோடு பெண்களும்
சரி நிகர் சமானமாக
வாழ்வம் இந்த நாட்டிலே"

– பாரதியார் கவிதைகள், விடுதலை : செய். 3)

அத்தகைய புதுமைப் பெண்களாகத் திகழ வேண்டுமென்றால் அவர்களிடம்,

"நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்
திமிர்ந்த ஞானச் செருக்கும்"

இருக்க வேண்டும் என்று பாரதி கூறுகிறார். பாரதியின் எண்ணத்தில் உருவான உரிமை மிக்க புதுமைப் பெண்ணாகத்தான் நாம் பாஞ்சாலியைக் காண்கிறோம்.

## புதுமைப்பெண்

சூதாட்டத்தில் தருமன் பாஞ்சாலியை வைத்து இழந்தவுடன் துரியோதனன், அவளை அழைத்துவரத் தேர்ப்பாகனை அனுப்புகிறான்.

வில்லுப்புத்தூரர் பாரதத்தில் வரும் தேர்ப்பாகனோ பாஞ்சாலியைப் பார்க்காமலேயே நடுவில் திரும்பி வந்து, "தருமன் தன்னை தோற்ற பின் என்னைத் தோற்றானா? அன்றி என்னைத் தோற்றபின் தன்னைத் தோற்றானா? என்று உங்களிடம் கேட்டறிந்து வரும்படி பாஞ்சாலி என்னை ஏவினாள்" என்று பொய்யுரை கூறுகிறான். ஆனால், பாஞ்சாலியை புதுமைப் பெண்ணாகப் படைக்க விரும்பிய பாரதியார் அங்ஙனம் செய்வாரா? பாஞ்சாலியே அங்ஙனம் தேர்ப்பாகனிடம் வினவியதாக அமைத்து விடுகிறார். முதலில், யார் சொன்ன வார்த்தையடா ! சூதர் சபைதனிலே தொல்சீர் மறக்குலத்து மாதர் வருதல் மரபோடா? யார் பணியால் என்னை அழைக்கிறாய்?" என்று தேர்ப்பாகனைக் கடிந்து கொள்கிறாள் பின்பு,

> ***"நல்லது; நீசென்று நடந்ததைக் கேட்டுவா.***
> ***வல்ல சகுனிக்கு மாண்பிழந்த நாயகர்தாம்***
> ***என்னைமுன்னே கூறி யிழந்தாரா? தம்மையே***
> ***முன்ன மிழந்து முடித்தென்னைத் தோற்றாரா?***
> ***சென்று சபையில்இச் செய்தி தெரிந்துவா"***

– துகிலு. சருக். பா.48 : (104 – 108)

என்று பாஞ்சாலி கூறுகிறாள். தன் கணவன் செய்த செயல் எத்தகையது என்பதைப் புரிந்து கொள்ளத் துடிக்கும் புதுமைப் பெண்ணாகப் பாஞ்சாலி இப்படிக் கேட்கிறாள். பாஞ்சாலியின் முழக்கத்தைக் கேட்ட தேர்ப்பாகன் அவைக்குத் திரும்பினான். "அரசே ! பெண்ணரசியின் தாள் பணிந்து ஈண்டு வரச் சொன்னதற்கு அவர்கள்,

> ***"என்னைமுதல் வைத் திழந்தபின்பு தன்னை யென்***
> ***மன்ன ரிழந்தாரா? மாறித் தம்மைத்தோற்ற***
> ***பின்னரெனைத் தோற்றாரா?"***

– துகிலு. சருக். பா. 48 : (16 – 18)

என்று இவ்வவையில் கேட்டுவரச் சொன்னார்கள். நானும் வந்து விட்டேன் என்று கூறுகிறான். துரியோதனன் அவனைக் கடிந்துரைத்து மீண்டும் சென்று கணப்பொழுதில் அழைத்துவரச் சொன்னான். பாஞ்சாலியை அடைந்த அத்தேர்ப்பாகனிடம் பாஞ்சாலியும் மீண்டும் தன் கருத்தை அழுத்தந் திருத்தமாகக் கூறுகிறாள். அவள் பேச்சில் புதுமைக் கருத்துக்கள் பொலிவதை நன்கு காணமுடிகின்றது.

**"நாயகர் தாந்தமைத் தோற்றபின் – என்னை**
**நல்கு முரிமை அவர்க்கில்லை – புலைத்**
**தாயத்தி லேவிலைப் பட்டபின், – என்ன**
**சாத்திரத் தாலெனைத் தோற்றிட்டார்? அவர்**
**தாயத்தி லேவிலைப் பட்டவர், – புவி**
**தாங்குந் துருபதன் கன்னிநான் – நிலை**
**சாயப் புலைத்தொண்டு சார்ந்திட்டால் – பின்பு**
**தார முடைமை யவர்க் குண்டோ?"**

துகிலு. சருக். பா. 52 : (1 – 8)

எனப் பாஞ்சாலி வினவுகிறாள். இத்தகு உறுதி வாய்ந்த பேச்சைக் கேட்ட தேர்ப்பாகனும், மேன்மேலும் சென்று திரும்பி வர விரும்பாததால், தன்னால் செல்ல இயலாது எனத் துணிந்து துரியோதனனிடமே மறுத்து விடுகிறான். இம்மறுப்புரையொன்றே உரிமை பேசும் உயரிய உள்ளத்தைக் காட்டுகின்றது.

## பாஞ்சாலி துச்சாதனனுடன் உரையாடுவது

வில்லிபாரதத்தில் துச்சாதனக்கு அஞ்சி ஒதுங்கிய பாஞ்சாலி, பாஞ்சாலி சபதத்தில் அவனை எதிர்த்துப் பேசுகிறாள்.

"தேவர் புவிமிசைப் பாண்டவர் ; – அவர்
தேவி துருபதன் கன்னிநான் ; – இதை
யாவரு மிற்றை வரையினும், – தம்பி,
என்முன் மறந்த ரில்லைகாண் – தம்பி
காவ லிழந்த மதிகொண்டாய் – இங்கு
கட்டுத் தவறி மொழிகிறாய் – தம்பி,
நீ வந்த செய்தி விரைவிலே சொல்லி
நீங்குக என்றனள் பெண்கோடி

– சபதச் சருக்கம் பா. 64 (1 – 8)

பாஞ்சாலியை ஒரு புதுமைப் பெண்ணாகப் படைக்க முயன்றதன் பயனாகத்தான் அவளை இப்படிப் பேசவைத்தார் பாரதியார்.

## பாஞ்சாலி நீதி கேட்டல்

கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன் என்பதை மெய்ப்பிக்க விரும்பாத பாஞ்சாலி,

"விதியோ கணவரே,

அம்மி மிதித்தே யருந்ததியைக் காட்டியெனை

வேதச் சுடர்த்தீமுன் வேண்டி மணஞ்செய்து

பாதகர்மு னிந்நாட் பரிசழிதல் காண்பீரோ"

– சபதச் சருக்கம் பா. 67 : (27-30)

என்று துணிந்து கேட்கிறாள். இறுதிவரை உன்னை வைத்துக் காப்போம் என்ற உறுதியோடல்லவா தன்னை அவர்கள் திருமணம் செய்து கொண்டனர். இப்பொழுது அந்நிலை மாறலாமா என்ற பொருளில் இப்படிக் கேட்கிறாள்.

## வீட்டுமனுக்குப் பதில் கூறுதல்

புதுமையில் நன்மை உண்டு என்பதை உணர்ந்தும் பழைமையை விட்டுக் கொடுக்காமல், அதன் காரணமாகப் புதுமையைப் புறக்கணித்தோர் பலர் பாரதியார் காலத்தில் இருந்தனர். இவர்களை வீட்டுமன் உருவத்தில் காட்டுகிறார் பாரதியார். வேதகாலத்தில் ஆணையும் பெண்ணையும் நிகரெனக் கொண்டனர். இப்பொழுது அந்நிலை மாறிவிட்டது. ஆடவருக்குப் பெண்டிர் அடிமைகளே என்று கூறினான். இதைக் கேட்ட பாஞ்சாலியை வைத்திழந்த தருமனின் கையை எரிக்கத் துணிந்த வீமனைக் கண்டித்த அருச்சுனன் தேவனாக மாறி, இந்தப் பாதகக் கர்ணனைப் போரில் மடிப்பேன் என்று சபதம் செய்கிறான். நாய் மகனாம் துரியோதனனைப் போர்களத்தின் கண்ணே தொடையைப் பிளந்து உயிர் மாய்ப்பேன். சூரத் துச்சாதனின் கடைப்பட்ட தோள்களைப் பிய்த்து அங்குக் கள்ளென ஊறும் இரத்தம் குடிப்பேன் என்று அருச்சுனனுக்கு முன்பே சபதம் கூறுகிறான் வீமன். பாஞ்சாலி புதுமைப் பெண்ணாக மாறியதால் தான் உணர்வற்றிருந்த இவர்களெல்லாம் உணர்ச்சிபெற்று அமரர்களைப் போல் பாராட்டப்படும் நிலையை எய்தினர் எனலாம்.

## பாஞ்சாலி சபதம்

பாரதியார் பாஞ்சாலியைப் புதுமைப் பெண்ணாகப் படைத்த பாங்கை அதன் உச்ச நிலையை அவள் அவையோர் முன் கூறும் சபதத்தால் நாம் உணர்கிறோம்.

"ஓம்
**தேவி பராசக்தி யாண யுரைத்தேன்**
**பாவிதுச் சாதனன் செந்நீர் அந்தப்**
**பாழ்த்துரி யோதனன் ஆக்கை யிரத்தம்**
**மேவி யிரண்டுங் கலந்து குழல்**
**மீதினிற் பூசி நற்நெய் குளித்தே**
**சீவிக் குழல்முடிப் பேன்யான்; இது**
**செய்யுமுன் னேமுடி யேன்"** – சபதச் சருக்கம் பா. 103 : (1-8)

என்று சபதம் கூறுகிறாள். இவள் சபதத்தைக் கேட்டவுடன் தேவர்களும் வானமும் 'ஓம்' என முழங்கியதாகவும், பூமியதிர்ச்சி உண்டானதாகவும், புழுதி விண்ணில் பறந்ததாகவும், தருமனே இப்புவிக்கு அரசன் என்று பூதங்கள் கூறியதாகவும் கூறுகிறார். இந்த நிலையில் பாஞ்சாலிக்கு எல்லையற்ற சினம் கிளம்பியது; நன்று கூறினீர் ! இராவணன் சீதையைக் கவர்ந்து வந்து சிறை செய்ததை அவனுடைய அமைச்சரும் பிறரும் பாராட்டினராம் ! அதைப் போல் உள்ளது இந்த நிலை. 'பேயரசு செய்தால் பிணந்தின்னும் சாத்திரங்கள் !' கள்ளங் கபடமற்ற தருமனைச் சூதாட வற்புறுத்திக் கேட்டதுதான் வஞ்சனையோ? நேர்மையோ?

**"முற்படவே சூழ்ந்து முடித்ததொரு செய்கையன்றோ?**
**மண்டப நீர் கட்டியது மாநிலத்தைக் கொள்ளவன்றோ?"**

– சபதச் சருக்கம் பா. 67 : (84 - 85)

என வினவுகிறாள். இப்படி வீட்டுமனுக்குச் சரியான முறையில் சாட்டையடி கொடுக்கிறாள்.

## மனிதரைத் தேவராக்குதல்

புதுமைப் பெண்ணின் உயர்ந்த பணி என்னவென்றால் மனிதத் தன்மை இழந்தோரை மனிதராக்குவதும், மனிதர்களைத் தேவர்களாக்குவதும் தான். இதைப் பாஞ்சாலி வாயிலாகச் செயல்படுத்துகிறார் பாரதியார். புரட்சியாளர்களின் உருவங்களான வீமன், விகர்ணன் ஆகிய இருவரிடைய வீரவுரைகளைக் கேட்டவுடன் அங்கிருந்த ஏனையோருக்கும் கொஞ்சம் உணர்ச்சி வருகின்றது. சில வேந்தர் எழுந்து இரைச்சலிடுகின்றனர்.

**ஒவ்வாது சகுனி செயுங் கொடுமை என்பார்;**

**ஒரு நாளும் உலகிதனை மறக்காது என்பார்;**

**எவ்வாறு புகைத்தாலும் புகைந்து போவீர்**

**ஏந்திழையை அவைக்களத்தே இகழ்தல் வேண்டா**

**செவ்வானம் படர்ந்தாற்போல் இரத்தம் பாயச்**

**செருக்களத்தே தீருமடா பழிஈது என்பார்;**

– சபதச் சருக்கம் பா. 83 : (3-8)

நல்லின்பத்தால் திளைத்து நன்கு வாழட்டும் என்று சொல்லி பாரதியார் தம் கதையை முடிக்கிறார்.

## முடிவுரை

பழமையை ஒட்டிய புதுமைதான் தான் விரும்புவது என்பதைப் புதுமைப் பெண் என்ற தலைப்பில் வரும் ஆறாவது செய்யுளிலே காட்டியிருக்கிறார் பாரதியார். இதன் அடிப்படையில்தான் இவர் பாஞ்சாலியைப் பழமையில் ஊறிய புதுமைப் பெண்ணாகக் காட்டுகிறார்.

கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்.

# வேளாளன் விண்ணப்பம்

தமிழாகரர் தெ. முருகசாமி, புதுச்சேரி - 9

கருகிய பயிரைக் கண்டபோ தெல்லாம்
கருகினேன்! கருநா டகத்தார்
உருகிடும் உளத்தால் ஓடிடும் காவிரி
உபரிநீ ரையுமே தராமல்
பருகிடும் எமக்கே நீர்போ தாதெனப்
பகர்ந்தே பைந்தமிழ் நாட்டில்
பெருகிடும் வேளாண் தொழிலையே பொசுக்கிப்
பொல்லாங் கிழைத்ததால் சினந்தேன் கறுவினேன்!

அந்தோ! இதுவோ! இந்திய நாட்டின்
இறையாண் மைக்காம் சான்றோ?
நொந்தே மடியும் வேளாண் மக்கள்
நொடிவைத் தீர்க்கா நிலையில்
வெந்தே போகும் பயிரும் உயிரும்
விடுக்கும் சாப விளைச்சல்
தந்தே அறுவடை சரித்திரம் படைத்துச்
சாதனை ஆக்கா தோதான்!

தவித்தவா யுக்கே தண்ணீர் தருதல்
மானுட நேயம் என்பர்!
அவிந்திடும் வயலைக் காணும்போ தெல்லாம்
அலையுதே மனமும் அந்தோ!
குவிந்திடும் நீரால் குலவிடும் நதிகளைக்
குறைவற மாநில மெங்கும்
கவிந்திடச் செய்தால் கனக்கும்வே ளாண்மை
விளைச்சலால் நாடுயர்ந் திடாதோ?

# திருக்குறளின் தோற்றக்களம் அல்லது உரைகாணும் நெறிமுறைகள்

## 6. தமிழ் மக்களின் பெருமை சிறுமை மாந்தவளம் அறிதல்

கோபி முனைவர் கா. அரங்கசாமி

## முன்னுரை

திருக்குறளின் உண்மைப் பொருள் அறிய வேண்டின் அது தோன்றிய பின்புலம் அறிதல் வேண்டும். இதனையே தமிழறிஞர் போப் அவர்கள் எடுத்துக் காட்டுவார். மண்ணிற் கேற்ற பயிர் வளர்வது போல மனிதகுலத்தின் நலன் வளம் யாவும் நல்ல நூற்கள் தோன்றுவதற்குக் காரணியாகும். அவ்வகையில் தமிழ்மொழியின் தோற்றம் சிறப்புப் பற்றிய செய்திகள் பல முன்னர்க் கூறப்பட்டன. ஆயினும் இங்கு இடைச்சங்க நூற்களாகிய ஐந்திறம், பஞ்ச மரபு கூறும் செய்திகளையும், தமிழரின் தலைநூலாகிய தொல்காப்பியம் கூறும் பெருங்கருத்துக்களையும், சங்க இலக்கியச் சான்றாண்மையும் காணல் வேண்டும். அதன் பின்னரே தமிழ் மக்களின் கருத்துக் கருவூலமான பெருமை, சிறுமை மாந்தவளம் பற்றிய உண்மைகள் நமக்குப் புலப்படும். அதனை இங்கு ஆய்வோம்.

## ஐந்திறமும் பஞ்சமரபும்

உலகம் எல்லாம் காட்டு விலங்கு நிலையில் இருந்தபோது தமிழ்மக்கள் உயர்ந்த சிறந்த பண்பாடு, நாகரிகம், கருத்துவளம் கொண்டு இருந்தனர் என்பதற்குத் தக்க சான்றாக இருப்பன இவையாகும். ஐந்திறத்தைப் போன்ற ஐந்துவகை இலக்கணம் கூறும் நூலும், பஞ்சமரபினைப் போன்று ஐந்துவகை இசையிலக்கணம் கூறும் நூலும் உலகிடைத் தோன்றவில்லை என்பதை அறிதல் வேண்டும். ஐந்திரம் உணர்வு, விண், ஒளி (ஒலி), வளி, அசைவது பற்றிய ஐந்தினையும் இலக்கணப்படுத்தும் ஒப்பற்ற நூல்.

அவ்வாறே பஞ்ச மரபும்,

**“இசையும் முழவுந் தாளமுங்கூத்தும்**
**அசைவில் அவிநயம் அஞ்சுறுப்பாகும்”**

என்று கூறுவதால் அதன் ஐந்துவகை இசையிலக்கணம் கூறும் திறம் அறியப்படும். இவ்வாறு பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னரே தமிழ் மக்கள்

விண், ஒலி, ஒளி, மாந்த உணர்வு போன்றவற்றையும் ஐந்து வகையான இசை இலக்கண மரபினையும் போற்றியதால் தமிழ் மக்களின் பெருமையும் மாந்த வளமும் நலமும் அறியப்படும். மேலும், பஞ்சமரபு, தோற்கருவி, துளைக்கருவி, நரம்புக் கருவி, மிடறு ஆகியவற்றைப் "பஞ்ச மாசத்தம்" என்று கூறுவதையும் அவற்றின் இலக்கணம் கூறும் திறத்தையும் காணின் தமிழ் மக்களின் உயர்வும் புலப்படும்.

## தொல்காப்பியத்தின் ஒப்புயர்வற்ற பெருமைகள்

தொல்காப்பியம் எழுத்துக்கும் சொல்லுக்கும் இலக்கணம் கூறுவதுடன் அமையாமல் வாழ்வியல், பொருளியல், இலக்கியம், மெய்பாடு, அகப்புறம், இலக்கியத் திறன், மெய்யியல், காலம், உயிர் பற்றிய இலக்கணம் கூறும் ஒப்பற்ற நூல். தமிழர் மரபின் களஞ்சியம். அதன் பெருமைகளாகக் கீழ்க்கண்டவற்றைப் பட்டியல் இட்டு நாம் காணலாம்.

1. எழுத்துக்கும் சொல்லுக்கும் தமிழர் மரபில் நின்று இலக்கணம் (கூறும்)
2. மரபினைப் போற்றும் அருமையான நூல் (மரபியல் கூறக் காண்க)
3. அகத்திணையியல் புறத்திணையியல் வழி வாழ்வின் அகப்புற இலக்கணம் கூறும்.
4. 'பொருளியல்' என்ற தலைப்பின் கீழ் வாழ்வியலில் பொருட்படுத்த வேண்டியன பற்றிப் பேசும்.
5. காலம் இடம் பற்றிய ஆய்வினைச் செய்த செப்பம்.
6. உயிர்ப் பாகுபாட்டைப் பகுத்தறிவுடன் பார்த்த நுட்பம்
7. உலகத் தோற்றம் பற்றிய சிந்தனைகள்.
8. வழக்கெனப்படுவது உயிர்ந்தோர் மேற்றே (நூற்பா 1592)

   *என்று மாந்தவள நலம் கூறக் காண்க.*
9. முதல் கரு உரி பற்றிய செய்திகள்

   (இயற்கையியலும் அறிவியலும் கலந்த பார்வை)
10. அதில் தெய்வத்தைக் கருவில் அடக்கிய பாங்கு
11. கொடி நிலை, கந்தழி, வள்ளி வழிபாட்டில் (1034) இடம் பெறும் மெய்யியல் நோக்கு.

12. மெய்யியல் பற்றிய செய்திகள்

( காமம் சான்ற கடைக் கோட் காலை நூற்பா 1138 காண்க)

13. ஆண்களுக்குரிய இலக்கணம்

14. பெண்களுக்குரிய இலக்கணம்

15. இருபாலார்க்கும் உரிய ஒப்புமைகள்

16. செய்யுள் வழக்கு இலக்கிய வழக்கு என்று பகுத்து ஆய்ந்தமை

17. எதார்த்தமான இலக்கிய நோக்கு

18. நாட்டுப்புற நளினம் கொண்ட இலக்கியம்

19. 32 வகைப்பட்ட உத்திகள் – இலக்கியம் படைக்கும் வழிமுறைகள் கூறும் திறம்.

20. சிறுகதைகள், புதினங்கள் படைக்க அடித்தளக் கோட்பாடுகள்

21. தொன்மை (புராணம்) பற்றிய செய்திகள்

22. 'உலா' 'பிள்ளைத் தமிழ்' போன்ற இலக்கியக்கரு பற்றிய செய்திகள்

23. எழுத்துக்களின் மரபினைக் கூறும் வகைதொகை

24. சொற்களின் வகை தொகை கூறும் திறம்

25. இலக்கணத்திற்கு இலக்கணம் கூறும் திறம்

26. இசையிலக்கண மரபுகள் பற்றியன

27. பண்பாட்டு இலக்கண மரபுகள் கூறும் திறம்

28. நல்லது இனியது என்று நாட்டப்பட்ட வழக்கு

29. வாழ்வியல் உண்மைகளை நடப்பியலில் கூறும் திறம்.

30. பெருந்திணை, கைக்கிளை இலக்கணம் கூறி, அன்றைய வாழ்வியலின் சிறுமை காட்டல்

31. மரபு சான்ற ஒழுக்கவியல் கூறும் நூல்

32. அகப்புற ஒழுக்கவியல் கூறும் பாங்கு

33. உயிரியல் கூறும் மரபு நிலைகள்

34. இடையியலில் சொல் வழக்காறுகள்

35. மாற்றிலக்கணம் கூறும் திறம்
36. வரலாற்று வழிப்பட்ட இலக்கணக் கட்டுக் கோப்பு
37. வழக்கும் செய்யுளும் ஆயும் பாங்கு
38. முன்னோர் கூறியதை வழி மொழியும் திறம்
39. பின்னர் வரும் விதிவிலக்குகளுக்கு இடம் தரும் திறம்
40. வாழ்வியலின் (அகப்புறம்) கருவூலம்
41. இலக்கியக் கோட்பாடுகளின் களஞ்சியம்
42. இலக்கணக் கோட்பாடுகளின் நிறைவு
43. வாழ்வியலுக்கும் கோட்பாடுகள் கண்ட பாங்கு
44. இசைக்கும் நாடகத்துக்கும் ம்ரபு வழிப்பட்ட கோட்பாடுகள்
45. பார்ப்பார், அந்தணர், அறிவர் பற்றிய (உண்மையான விளக்கங்கள்)
46. மந்திரம் பற்றிய மாபெரும் உண்மை விளக்கம்
47. இயற்கையைப் போற்றும் நுட்பம்
48. இயல்பான இயல்நெறி உண்மை காட்டல்.

மேலும் தொல்காப்பிய நுட்பம் உணர்ந்தார் பல உண்மைகளைக் காணலாம். இத்தகைய சிறப்பு மிக்க தனித்தமிழ் முதல் நூல் தொல்காப்பியம் என்பதை எங்கள் மொழியும் தரமும் அறிவியல் பார்வை என்ற தலைப்பில் அமைந்த பல்வேறு தொகுதிகள் (9 தொகுதிகள்) காட்டும். ஆனால் தமிழில் பட்டம் பெற்ற சிலர் கயமை உள்ளத்துடன் இவற்றையெல்லாம் சமசுகிருத வாய்ப்பட்டதாகப் (பொய்யைப் பொருந்தக் கூறாத) பொய்மையும் இங்கு நடக்கின்ற கொடுமையும நாம் காண்போம்.

## திருக்குறளின் பெருமை :

செர்மானியரும் இருமுறை நோபல் பரிசு பெற்ற வருமான மெய்யியல் அறிஞர் மருத்துவர் ஆல்பர்ட் சுவைட்சர் திருக்குறளுக்கு முன்னும் அது போன்ற ஒரு நூல் தோன்றவில்லை, திருக்குறளுக்குப் பின்னும் அது போன்ற ஓர் ஒப்பற்ற நூல் தோன்றவில்லை என்று கூறியதை நாம் மறத்தல் கூடாது. மேலும் தமிழறிஞர் போப் அவர்கள், திருக்குறள் போன்ற உலகின் தலை நூல் தோன்ற வேண்டின், அச்சமூகம் ஒரு பண்பட்ட சமூகமாக இருக்க வேண்டும் என்று கூறியதையும் நாம் மறத்தல் கூடாது. மேலும் திருவள்ளுவரின்

பெருமைகளைத் திருவள்ளுவ மாலை கூறுவதையும் எண்ணுதல் வேண்டும். உலகம் போற்றும் திருக்குறளுக்கு இணையான நூல் வேறு இல்லை என்பதை இன்றும் பாரிசு அருங்காட்சியகத்தில் உள்ள எபிரேய மொழி ஆவணம் கூறுவதையும் நாம் நினைத்தல் வேண்டும். ( எபிரேய மொழி கி.மு. நூற்றாண்டில் வழக்கில் இருந்து இறந்துபட்ட மொழியாகும். அதனை ஈப்ரு என்றும் கூறுவர் ) இவ்வாறு அனைத்துலகும் போற்றும் திருக்குறளைப் பெற்றும் அதன் பெருமையறியாத சிறுமையராய்த் தமிழ் மக்கள் இழிந்து கிடப்பதைக் காணும் போது வருத்தமே மிகும். ( இன்றைய தமிழர் இழிந்த திரைப்படத்துக்கும் அழிவு அரசியலுக்கும் ஆட்பட்டுள்ளதைக் காண்க ) திருவள்ளுவர் கூறும் மக்கள் நலத்தையும் வளத்தையும் பற்றி அறிஞர்களாவது ஆய்ந்து உண்மை காணல் வேண்டும்.

மாந்தவளம் பற்றிக் கூறும் போது இன்றைய அறிவியல் அறிஞர்கள் கூறும் கருத்துடன் திருக்குறள் கருத்துக்களை ஒப்பிட்டுக் காணின் திருக்குறள் உயர்ந்து விளங்கக் காணலாம். திருவள்ளுவர் மாந்தர்களை 18 வகையாக வகைப்படுத்தி உரைக்கக் காணலாம். அவ்வகையில் தாழ்ந்தோர் செம்பாதியாக உள்ளதையும் அவர் பதிவு செய்ய அவரது பெருந்தகவு புலப்படும். திருவள்ளுவர் காலத்தில் தமிழ் நாட்டின் மக்கள் தொகை மிக மிகக் குறைவே. அவற்றுள்ளும் செம்பாதி தாழ்ந்து வீழ்ந்து அடங்கி ஒருங்கிக் கயமையராய் இருக்கக் காண்பது அவர்தம் நடுவு நிலைப் பண்பைக் காட்டும். தாழ்ந்த மாந்தர் பற்றிய கருத்துக்கள்.

1. "செத்தாருள் வைக்கப்படும்" (குறள்) எதுவுமற்ற பிணம் போல வாழ்வோர்.
2. "அலகையா வைக்கப்படும்" (குறள்) பணப்பேயின் பின் ஓடும் மனிதர்கள்.
3. "பதடி எனல்" (குறள்) நெல்லுள் பதர் போல தோற்றத்தால் மனிதராக உள்ளவர்கள்.
4. "விலங்கு" (குறள்) விலங்கு வாழ்க்கை வாழ்வோம்
5. "மரம்" (குறள்) மரமாக வாழ்கின்றவர்கள்
6. "மரப்பாவை சென்று வந்தற்று" (குறள்) மரப்பாவை போல வாழ்கின்றவர்கள்

7. "சிற்றிமை" குறள் சிற்றினத்தர் தாழ்ந்த
   இழிந்த செயலுக்கு அடிமைப் பட்டவர்கள்
8. பண்பிலார் மக்கட் பண்பில்லார் (குறள்)
   மாந்த நலத்துக்குரிய பண்பு ஏதும் இல்லார்
9. கயவர் (கயமை அதிகாரம்) தம்மையே விற்கும்
   கீழ்மக்கள் (இன்றும் வாக்குரிமையை விற்கும் கயவர் காண்க)

எனத் தாழ்ந்த இழிந்த மக்களைத் திருத்தும் கடமை உயர்ந்தோர்க்குண்டு என்று திருக்குறள் கூறிடக் காண்க.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான் உறையும் தெய்வம் ஆவான் என்று கூறி மாந்தனைத் தெய்வம் ஆக்கும் விந்தை மிக்க வித்தையைக் கூறுகின்றார் திருவள்ளுவர். இவ்வாறு மாந்த குலத்தைத் தெய்வமாக்கும் வள்ளுவர், மாந்த குலத்தைத் தெய்வமாக்கும் பணியைச் செய்வோர் யார் யார் எனத் திருவள்ளுவர் கூறிடக் காண்க. அவர்களைப் பற்றிய செய்திகளையும் கீழ்க் காண்போம்.

அந்தணர் ( தூய துறவியர் ), ஆன்றோர், சான்றோர், அறவோர், நல்லோர், பண்புடையார், பெரியோர், குறிப்பறியும் திறம் மிக்கவர், மெய்யுணர்ந்த மெய்யியல் அறிஞர்கள் என்னும் ஒன்பது வகையினரும் மன்பதையைக் காக்கும் காவலர்கள் என்று குறள் உணர்த்தக் காண்க.

இதனால் திருவள்ளுவர் காலத்திலேயே தமிழ் மக்களில் பாதிப்பேர் இழிந்தவர்களாகவும் ( சிறுமையர் ) பாதிப்பேர் உயர்ந்தவர்களாகவும் ( பெருமையர் ) இருந்தமை அறியப்படும். இவ்வாறு உண்மை நிலையை உலகுக்கு அறிவித்த பெருமை திருவள்ளுவர்க்குரியது என்பதை நாம் நினைதல் வேண்டும்.

இன்று போல அன்றும் அறியாமையைக் காதலிக்கும் கடையர்கள் இருந்தனர் என்பதை 430வது குறள் உணர்த்தும். அக்குறள் வருமாறு,

"காதல காதல் அறியாமை உய்க்கிற்பின்
ஏதில ஏதிலார் நூல்" (430) என்பதாகும்.

( இதன் பொருள், காதல் அறியாமையை விட்டுத் தொலைக்க அறியாமையைக் காதலிப்பது காதலுக்குரியது அன்று. அதுமட்டுமல்ல

ஆயலர்களின் நூற்களில் ஏதும் இல்லை; அதனை வேதம் மந்திரம் என்று கொண்டாடுவதை ஒழிந்திடுக என்று கூறுவதையும் காண்க. இவ்வாறு சொற்கிடந்த வழிப் பொருள் கொள்ளாமல் பரிமேலழகர் மாற்றுப் பொருள் உரைப்பதையும் காண்க ) திருவள்ளுவர் "கனவினும் இன்னாது சொல்வேறு செயல் வேறு பட்டார் தொடர்பு என்பார். ( எனவே இந்தக் குறள்வழிப் பரிமேலழகர் கூறுவது பிழைபட்ட பொருள் என்பதை அறியலாம் ) எனவே திருக்குறளின் பெருமைகளைக் கீழ்க்கண்டவாறு நாம் பட்டியல் இட்டுப் பார்க்கலாம்.

1. திருக்குறள் தமிழ் மண்ணில் விளைந்த அறவியல் மெய்யியல் நூல்.
2. உலகம் ஏற்றுப் போற்றும் பொதுமறை
3. தமிழ் மக்களின் அறவியல் எதுவென உணர்த்துவது
4. தமிழரின் பண்பாட்டினை எடுத்துரைப்பது
5. தமிழர் கண்ட அறிவர் நெறி இதுவெனக் காட்டுவது
6. விண்வெளி வாழ்க்கைக்கு வழிகாட்டுவது
7. மனிதனை வாழ்வாங்கு வாழச் செய்வது
8. அறவியல் உலகினை ஆள வேண்டும் என்று கூறுவது
9. அறவியல் அனைத்து மாந்தர்க்கும் பொதுவென்பது
10. அறவியல் மெய்யியல் உலகினை ஆள வேண்டும் என்று கூறுவது
11. மாந்தவளத்துக்கும் நலத்துக்கும் முதலிடம் தருவது
12. உளவியல் அடித்தளத்தில் உண்மை காண்பது
13. உலகியலில் பெண்மை நலம் போற்றுவது
14. காமத்துப் பாலின் வழி உலகியலை இன்பம் ஆக்குவது
15. உலகெங்கும் மாந்த முயற்சிக்கே முதலிடம் தருவது
16. புராணப் பாங்கில் உலகம் கிடந்த போது பகுத்தறிவுக்கே முதலிடம் தந்தது.
17. அறிவே அற்றம் காக்கும் கருவி என்று கூறி ( அறிவியலுக்கு முன்னிடம் தந்தது.
18. ஆற்றல் பெருக்கம் மாந்த ஆளுமை, என்றும், மாந்த இயல்பு என்றும் கூறும் சிறப்பு.

மேலும் திருக்குறளின் சிறப்புக்கள் விரியும் என்பதால் இத்துடன் நிறைவு செய்வோம். திருக்குறளைப் போற்றாத உலகத்து அறிஞர்கள் எவரும் இலர் என்று காணும் போது அதன் பெருமை எல்லையற்று விரியக் காணலாம்.

முடிவுரை

தொடர்ந்து தமிழ் மண்ணின் பெருமை சிறுமை, மாந்த வளம் நலம் அறியச் சங்க காலச் சமுதாயத்தை நாம் சங்க இலக்கியத்தின் வழி நின்று காண்போம். அப்போதுதான் திருக்குறள் தோன்றிய பின்புலத்தை நாம் அறிதல் கூடும். அதனைத் தொடர்ந்து காண்போம். (தொடரும்)

---

# வாசகர் வாசகம் ①

பேரன்புசால் செந்தமிழ் ஆசிரியர் அய்யா,

அவர்களுக்கு வணக்கம். குறுந்தொகையாம் சங்க இலக்கியத்தில் தமிழக மன்னர்களும் ஆரிய அரசனுங் கூட பாக்கள் புனைந்துள்ள பாங்கினை சான்றுகளோடு அசோகன் அவர்கள் ஊன்றிப் பதிய வைத்துள்ளார். இன்று புவி வெப்பமடைவதை சங்க காலத்திலேயே உணர்ந்த புலவர் ஐங்குறுநூற்றுப் பாலைத் திணைப் பாடல்களில் பிரதிபலித்துள்ளதை விவரித்து, விளைவுகளையும் சுட்டி அதனால் வளம் குறைந்தழிவதை தர்மராஜ் நன்கு படம் பிடித்துக் காட்டியிருந்தார்.

மொழிக்காதாரமான எழுத்துக்களின் உச்சரிப்பிலும் பொறிகளின் ஈடுபாட்டைக் கோடிட்டுக் காட்டியுள்ளார் ஐம் பொறியார். தொல்காப்பியரின் சூத்திரங்களை முன்னிறுத்தி மொழியியலின் பயன்பாட்டைக் கொட்டிக் கொடுத்து விழிதிறக்கவைக்கிறார் ரேணுகாதேவி. தொல்காப்பியத்தின் அடிப்படையில் கல்வெட்டுக்களில் காணப்படும் மக்கட் பெயர்களை இடுகுறி, காரணமென ஆய்ந்து நம் நெஞ்சில் தேடவைக்கிறார் அருள்மொழி.

அன்புடன்,

**புலவர் ந. ஞானசேகரன்,** திருலோக்கி

# தீண்டாமை வேண்டும்

ஆறுவிரல் ஐம்பொறி

நஞ்சுள்ள பாம்புதனைத் தீண்டாமை வேண்டும்
நடமாடும் விலைமாதர் தீண்டாமை வேண்டும்
அஞ்சுகின்ற கொடுந்தோளைத் தீண்டாமை வேண்டும்
அகந்தூய்மை இல்லாரைத் தீண்டாமை வேண்டும்
துஞ்சுகின்ற கொடுந்தோளைத் தீண்டாமை வேண்டும்
தொற்றுபிணி உள்ளோரைத் தீண்டாமை வேண்டும்
நெஞ்சத்தில் அன்புள்ள சான்றோரே ! போற்றும்
நேசமுள்ள மனிதரைஏன் தீண்டாமை வேண்டும்?

வஞ்சகரின் பொய்யுறவைத் தீண்டாமை வேண்டும்
வாழ்வழிக்கும் கொலைகளவு தீண்டாமை வேண்டும்.
பிஞ்சினிலும் தீச்சொல்லைத் தீண்டாமை வேண்டும்
பிணமாகும் வரைக்கோபம் தீண்டாமை வேண்டும்
பஞ்சத்தைத் தரும்சூதைத் தீண்டாமை வேண்டும்
பாவத்தின் வழிதன்னைத் தீண்டாமை வேண்டும்
நெஞ்சத்தில் ஈரமுள்ள சான்றோரே ! பண்பு
நெறியுள்ள மனிதரைஏன் தீண்டாமை வேண்டும்?

## வாசகர் வாசகம் ②

குறுந்தொகையாம் இலக்கியத்தில் மன்னர் தோய்ந்தே
கொடையோடு நறும்பாக்கள் யாத்த மாண்பைங்
குறுநூற்றில் புவிவெப்பம் அடையும் தீம்பும்
குவித்தேவாய் உச்சரிக்கும் எழுத்தின் சால்பும்
சிறுகதையில் ஆர்.சூடா மணியின் ஆற்றல்
சிலவரைத்தும் குறள்மாட்சி எடுத்தியம்பி
பெருமையுற கல்வெட்டின் சிறப்பைக் கூறும்
பீடுறுநல் செந்தமிழாம் இதழை வாழ்த்து !

**பாவலர் அறிவரசன்,** திருலோக்கி

---

## வாசகர் வாசகம் ③

மதிப்புயர் செந்தமிழ் ஆசிரியப் பெருந்தகை அவர்கட்கு ! வணக்கம்.

2013 சனவரி இதழில் மதுரை திருமிகு முனைவர் வீ. ரேணுகாதேவி அவர்கள் எழுதிய தொல்காப்பிய உருபனியல் கோட்பாடு பற்றிய கட்டுரை அருமை; பாராட்டு. இன்றைய மொழியியல் கருத்து - அன்றே பதிவாகி உள்ளதை எடுத்துக் கொடுத்த விதத்தால் கட்டுரையாளரும் கட்டுரையும் தொல்காப்பியரும் தமிழும் ஓங்கிய சிறப்பைச் செந்தமிழ் இதழும் பெற்று விட்டது. நன்றி.

**தெ. முருகசாமி**

---

ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு.

# ஆசிரியர் குழு

திரு. இரா. குருசாமி பி.ஏ.,

பெரும்புலவர் திரு. இரா. இளங்குமரன்

முனைவர் திரு. தமிழண்ணல்

முனைவர் திரு. கதிர் மகாதேவன்

முனைவர் திரு. க. சின்னப்பா


தொடர்பு முகவரி

ஆசிரியர்

செந்தமிழ்
மதுரைத் தமிழ்ச் சங்கம்
54, தமிழ்ச் சங்கச் சாலை
மதுரை - 625 001
தொலைபேசி : 0452 - 6575615



பதிப்பாசிரியர் : இரா. அழகுமலை, எம்.ஏ., எம்.ஃபில்.
செயலாளர், மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை – 1
தொலைபேசி : 0452 - 6575615

அச்சிடுவோர் : தவம் பிரிண்டர்ஸ், 32, மேலமாசி வீதி, மதுரை – 1

RNI Regd. No. 5508/57 March 2013 MA/130/2011-2013
Posted at Madurai BPC on 25th of every month


# செந்தமிழ்க் கல்லூரி



## மதுரைத் தமிழ்ச் சங்கம்

( தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் B+ தேசியத்தரம் பெற்றது )
மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை – 625 001 ✆ 0452 - 2343707, நிகரி : 0452 - 4373475

- ✦ இளம் இலக்கியம் ✦ இளங்கலை ✦ முதுகலை
- ✦ இளம்நிலை ஆய்வாளர் ✦ முதுநிலை ஆய்வாளர்
- ✦ பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

நன்கொடை கிடையாது

**சிறப்பு அம்சங்கள்**

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வுப் பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புக்கள் உள்ளன**

**முனைவர் மு. மீனா**
முதல்வர் (பொறுப்பு), செந்தமிழ்க் கல்லூரி

**இரா. குருசாமி**
செயலாளர், செந்தமிழ்க் கல்லூரி


அனுப்புநர்,
**செயலாளர்**
மதுரைத் தமிழ்ச் சங்கம்
மதுரை - 625 001

*From*
**SECRETARY**
Madurai Tamilsangam
Madurai - 625 001
TAMILNADU, S. INDIA

பெறுநர் / To,

Printed by V. Govindarajan, published by R. ALAGUMALAI M.A., M.Phil. on behalf of Madurai Tamil Sangam, Madurai and printed at Davam Printers, 32, West Masi Street, Madurai - 1, and published at 54, Tamil Sangam Road, Madurai. Editor R. ALAGUMALAI M.A., M.Phil.